# முல்லையில் 5 படை பலி; ஆயுதங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் முகாமில் இருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் அவர்களிடமிருந்து ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் கப்டன் பிரகாஸ் உட்பட மூன்று போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 5:30 மணியளவில் முல்லைத்தீவு கடற்கரையோரத்தில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரணில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ஐந்து சிறிலங்கா இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். இதேவேளை இராணுவத்தினருக்கு உதவியாக அருகாமையில் அமைந்துள்ள பல காவலரண்களில் இருந்தும் இராணுவத்தினர் வெளியேறி முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் மீண்டும் எதிர்த் தாக்குதலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 8 விலை ரூபா 5.50

ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 17 (31 - 05 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 104

## புலிகளுடன் பேசும்படி அரசு வேண்டுகோள்

(கொழும்பு)

வட பகுதி மக்களுக்கு, உணவுப் பொருள்கள் அனுப்புவதற்காக காங்கேசன்துறை முகத்தை திறப்பது பற்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை சிறிலங்கா அரசாங்கம் கேட்டுள்ளது: வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நாவின் மேற்பார்வையில் பேச்சுவார்த்தை

## உலக மனித உரிமை நிறுவனங்கள் தலைவர் பிரபாகரனிடம் கோரிக்கை

ஐ. நா. சபையின் மேற்பார்வையில் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பளிக்குமாறு பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை நிறுவனங்கள் தலைவர் பிரபாகரனிடம் கோரிக்கை விடுத்துள்ளன. பேச்சுவார்த்தைகள் மூலமாக தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வுகாண சந்தர்ப்பம் அளிக்குமாறும் இந்த வேண்டுகோளில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஜப்பான், மேற்கு ஜெர்மனி, மலேசியா, தைவான், இந்தோனேசியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இயங்கி வரும் மனித உரிமை நிறுவனங்கள் தலைவர் பிரபாகரனுக்கு இது சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் கடிதங்களை எழுதியுள்ளன. சிங்கள அரச படைகளால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுவரும் பேரழிவுகள் பற்றியும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் இந்த நிறுவனங்கள் ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துள்ளன.

## மாந்தையில் புலிகள் இராணுவம் மீது தாக்குதல்

(மன்னார்)

மன்னார் மாந்தையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருந்து முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் மேற்கொண்டதில் பலத்த இழப்புகளுடன் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை 7·30 மணியளவில் மாந்தையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இரா

(8ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கிற்கு பிரதேச சுயாட்சி வழங்க புதிய கட்சி வற்புறுத்து

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் பிரதேச சுயாட்சி அமைப்புமுறை உருவாக்கப்பட்டு தமிழ் மக்கள் தமது நிர்வாகத்தை தாமே நடத்த அனுமதிக்கப்படவேண்டும் என்று புதிய ஜனநாயக கட்சி என பெயர் மாற்றம் செய்த இலங்கை கம்யூனிஸ்ட்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் புலனாய்வுக்குழு கொழும்பு வந்துள்ளது

(கொழும்பு)

ராஜீவ் காந்தி பலியான குண்டு வெடிப்புச் சம்பவத்தில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்பது பற்றித் துப்புத்துலக்க மத்திய புலனாய்வுக் குழு நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்தது.

மத்திய புலனாய்வு அமைப்பின் இயக்குனர் விஜயகரன், சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் டி. ஆர். கார்த்திகேயன் உள்ளிட்ட மூவர்புலனாய்வுக்குழு ஒன்று நேற்றுக்காலை சென்னையிலிருந்து புறப்பட்டுக் கொழும்பு வந்துசேர்ந்தது. இக்குழுவினர் இலங்கை இராணுவத்துறை அதிகாரிக

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### முல்லையில் நால்வர்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுக்காலை 5.30 மணியளவில் சிறிலங்கா இரா

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பிரபாகரன் ஒரு கர்ம வீரன்

# பொய்யான வதந்திகளுக்கு பாலசிங்கம் பதிலடி

(யாழ்ப்பாணம்)

"பிரபாகரன் ஒரு வரலாற்று மனிதர். ஒரு புதிய வரலாற்றைப் படைக்கப் பிறந்தவர். தனது வரலாற்றுக் கடமை என்ன என்பதை ஆழமாக உணர்ந்தவர். அந்த வரலாற்றுப் பணியை வெற்றிகரமாக முடிக்க அவர் இராப்பகலாக உழைத்து வருகிறார். பொது வைபவங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் கலந்துகொள்ள அவருக்கு அவகாசமில்லை. இதனால் மக்கள் மத்தியில் அவர் பற்றி தவறான வதந்திகளும் பரவுவதுண்டு இது பற்றி எல்லாம் அவர் பொருட்படுத்துவதில்லை. தான் வரித்துக் கொண்ட இலட்சியத்தை, தனது வரலாற்றுப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும் என்பதில் தான் அவர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் பிரபாகரன் ஒரு கர்ம வீரன்"

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சமீபத்தில் அரியாலை



அரியாலை தயா சனசமூக முன்றலில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

"பிரபாகரன் பற்றி எமது மக்கள் மத்தியில் பலவிதமான வதந்திகள் உலாவுகின்றன. பிரபாகரன் இறந்துவிட்டார், அவருக்குப் பதிலாக ஒரு போலி மனிதர் செயற்படுகிறார், என்றெல்லாம் விஷமத்தனமான வதந்திகள் பரப்பப்படுவதை நாம் அறிவோம். இவற்றை எல்லாம் கேட்கும் பொழுது எமக்கு ஆழ்ந்த வேதனையையும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் சுருளி புகழுடல் கோப்பாயில் தகனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 27ஆம் திகதியன்று எதிர்பாராத முறையில் நடந்த வெடிவிபத்தில் காயமடைந்திருந்த மேஜர் சுருளி என்றழைக்கப்படும் கந்தசாமி ஸ்ரீதரன் நேற்று மரணமடைந்தார்.

மேஜர் சுருளி மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவரின் புகழுடம்பு பொதுமக்களின் அஞ்சலிக்காக அவரது சொந்த இடமான மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நண்பகல் 12மணியளவில் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் நீர்வேலி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது, பெருந்திரளான மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

மேஜர் சுருளியின் புகழுடம்பு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுக் கோப்பாயில் உள்ள மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



# புனர்வாழ்வு நிதி பற்றாக்குறையால் விண்ணப்பங்கள் தேங்கிக்கிடக்கின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் புனர்வாழ்வு வேலைகளுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் நிதி போதுமானதாக இல்லை.

கடந்த பல ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு புனர்வாழ்வு அமைச்சு இதுவரை வழங்கிய நிதி எந்த வகையிலும் போதுமானதாக இருக்கவில்லை என்றும் ஏற்பட்ட பாதிப்புக்களில் ஒரு பகுதிக்கு மட்டுமே நிவாரணமளிப்பதற்கு போதுமானதாக இருந்தது என்றும் யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய, இலங்கை இராணுவ நடவடிக்கையினால் உயிரிழந்தமைக்காக நிவாரணம் கோரி கடந்த ஏப்ரல் மாதம் வரை 4400 விண்ணப்பங்களும், காயமடைந்தவர்களுக்கு நிவாரணம் கோரி 1500 விண்ணப்பங்களும், யாழ். செயலகத்துக்குக் கிடைத்த போதிலும் இதுவரை மேற்படி இருவிடயங்கள் தொடர்பான விண்ணப்பங்களிலும் சுமார் 2210 விண்ணப்பங்களுக்கு மட்டுமே நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

வீடு உடைக்கப்பட்டமைக்காக நிவாரணம்கோரி ஒரு லட்சத்து ஆறாயிரத்து ஐந்நூறு விண்ணப்பங்களும், தொழில் இழந்தமைக்காக அறுபத்தைந்தாயிரத்து எழுநூறு விண்ணப்பங்களும் கிடைக்கப் பெற்ற போதிலும் மேற்படி இருவிடயங்கள் தொடர்பான விண்ணப்பங்களிலும் சுமார் முப்பத்தொன்பதினாயிரத்து இருநூற்றுத் தொண்ணூறு விண்ணப்பங்களுக்கு மட்டுமே இதுவரை நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எனினும் காயமடைந்த அனைவரும் நிவாரணத்திற்காக விண்ணப்பிக்கவில்லை என்பதுடன் அண்மைக் காலங்களில் விண்ணப்பித்த சகல விண்ணப்பங்களும் செயலகத்திற்கு கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் வடகிழக்கு பகுதிகளில் புனர்வாழ்வு அமைச்சின் வீடமைப்பு மற்றும் வீடுதிருத்துதல் போன்ற புனர்வாழ்வுத்திட்டங்கள் முற்றாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இத்திட்டங்களுக்கும் நடைமுறையில் இருக்கும் பூர்த்தியாக்கப்படாத புனர்வாழ்வுத் திட்டங்களுக்குமிய கொடுப்பனவுகளுக்கும் 250 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் தேவை என்று செயலக புனர்வாழ்வுப்பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

புனர்வாழ்வு அமைச்சுக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக போதுமான நிதி ஒதுக்கீடு கிடைத்த போதிலும் இதுவரை திறைசேரியால் இந்த அமைச்சுக்கு நிதி வழங்கப்படாமையாலேயே மாவட்ட செயலக புனர் வாழ்வுப்பகுதியினருக்கு நிதி வழங்கப்பட முடியாதநிலைமைபுனர்வாழ்வு அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது என கொழும்பில் இருந்து எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினருக்கு அண்மையில் கிடைக்கப்பெற்ற சுமார் எண்பது மில்லியன் ரூபா இம் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக உயிரிழந்தமைக்காக நிவாரணம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கப்படவிருப்பதாக செயலகத்தில் இருந்து இறுதியாக எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

## நஞ்சருந்தி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக குடும்பப்பெண் ஒருவர் நச்சுத் திரவம் அருந்தி தற்கொலை செய்துள்ளார்.

கடைப்பிராயைச் சேர்ந்த முத்தம்மா (வயது 30) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார். (ச)

## இன்டரக்ற் கழகம் உடுபுடைவைகள் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் தீவகப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு சீருடைக்கான துணிகளையும் பொது மக்களுக்கு உடுபுடைவைகளையும் உணவுப் பொருள்களையும் இன்டரக்ற் கழகம் வழங்கியுள்ளது.

யாழ் திருக்குடும்பக்கன்னியர் மடத்தைச் சேர்ந்த மேற்படி கழகம் பொதுமக்களிடமிருந்து பெற்ற உடுபுடைவைகளையும் 19,500 ரூபாவிற்கு நூற்றி எழுபத்திஏழு மீற்றர் துணியைக் கொள்வனவு செய்து அதனைத் தீவகப் பகுதி சொத்தணி அதிபரிடம் ஒப்படைத்துள்ளனர். மேலும் புனித சூசையப்பர் மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோருக்கு காலை உணவையும் வழங்கினர்.

## இடம் பெயர்ந்த 2½ இலட்சம் மக்கள் குடாநாட்டில் வாழ்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் யாழ். மாவட்டத்தில் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் பொது மக்கள் தமது சொந்த வாழ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்து வாழ்க்கையைத் தொடர்கின்றனர்.

சிறிலங்கா அரசின் முப்படைகளினதும் தாக்குதல் நடவடிக்கைகள் காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வெளிமாவட்டங்களில் இருந்தும் இடம் பெயர்ந்த இம்மக்கள் முகாம்களிலும், தமது உறவினர்களின் வீடுகளிலும் வாழ்கின்றனர்.

இடம் பெயர்ந்த மக்களுக்காக இம்மாவட்டத்தில்சுமார் 205 முகாம்கள் தற்பொழுது செயற்பட்டு வருகின்றன.

இம் முகாம்களில் சுமார் 1500 குடும்பங்களும் தமது உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் சுமார் 28,000 குடும்பங்களும் தங்கிதமது வாழ்க்கையை தொடர்கின்றனர்.

இவற்றை விட வெளிமாவட்டங்களில் இருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சுமார் 7000 குடும்பங்கள் இம் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் போதிய இருப்பிடம் மற்றும் மருத்துவ,சுகாதார வசதிகள் அற்ற நிலையிலும் வாழ்கின்றனர். (ச)

## குரங்கு கடித்து 6 பேர் காயம்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டைக் கூழாவடிப்பகுதியில் குரங்குகள் கடித்ததால் காயமடைந்த ஆறு பொதுமக்கள் நேற்றுக் காலை தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

மேற்படி பகுதியில் பொது மக்கள் தமது வீடுகளில் குரங்குகளை வளர்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களால் வளர்க்கப்படும் மேற்படி குரங்குகளே இவ்வாறு நேற்றுக்காலை ஆறு பொது மக்களைக் கடித்துள்ளன. (ச)

## புதிய பிரதமர் பதவி ஏற்பு

நேபாளிய காங்கிரஸ் தலைவர் கிரிஜா பிரசாத் கொயிலாலா நேபாளத்தின்புதியபிரதமராகநேற்றுமுன்தினம்பதவியேற்றார்.

நரேன்கிற்றி அரண்மனையில் அவர்நேற்று முன்தினம் பிரதமர்பதவியினை ஏற்றுக்கொண்டார். மன்னர் பிரேந்திரா அவருக்குபதவிப்பிரமாணம்செய்து வைத்தார்.

முன்னதாக கடந்த செவ்வாயன்று பிரதம மந்திரி பிரசாத் கொயிலாலா தமதுஅமைச்சர்களின் பெயர்ப்பட்டியலை மன்னர் பிரேந்திராவிடம் சமர்ப்பித்திருந்தார்.

## ஆலோசனை சபைக்கூட்டம்

ஊர்காவற்றுறை துயர் துடைப்புச் சங்க ஆலோசனை சபை உறுப்பினர்களுக்கான முக்கிய கூட்டம் வரும் திங்கட்கிழமை (3.6.91) காலை 9-30 மணியளவில் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் அகில உலக செயர் ஸ்தாபனத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள மேற்படி பணிமனையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியுள்ளதால் ஆலோசனை சபை அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## திறந்தபல்கலைக் கழகத்தில் புதியபாட கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில புதியபாடகற்கைநெறியொன்றுஆரம்பமாகவுள்ளது.

கல்வியாண்டு 91 / 92 ஆம் வருடத்திற்கான விஞ்ஞானமானி தொழில் நுட்பவியல் டிப்ளோமா பாடநெறிக்கே தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறியினைபயில விரும்புவோர் அதற்கானவிண்ணப்பங்களை யாழ் பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பயில விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் விஞ்ஞானம் கணிதம் உட்பட ஆறுபாடங்களில்சித்தியடைந்திருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் இதற்கான வகுப்புகள்ஆரம்பமாகவுள்ளன இதன் விரிவுரைகள் தமிழ், ஆங்கில மொழியில் நடைபெறும்.

இதற்கான விண்ணப்பங்களை அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்குமுன் யாழ். பிராந்திய நிலையத்திற்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இவர்களுக்கான முதல் நிலைப் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ச)

## திருமுறைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

திருமுறைப் பெருவிழா ஒன்று யாழ்.நகரின் சில இடங்களில் நேற்று வியாழக்கிழமை முதல் நடைபெறுகிறது.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் இவ்விழாவினை நடாத்துகின்றனர். இன்றுவெள்ளிக்கிழமை அருள் மிகு சட்டநாதர் ஆலயத்திலும் சனிக்கிழமை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்திலும் இவ்விழா நடைபெறும்.


## பாலம்

பாலத்தின் உணவகம் ஆரம்பமாகும்பொழுது
அது ஆரம்ப விழா. அது 25 வருடம்
ஆகும்போது அது வெள்ளிவிழா.
இதுவே உண்மை.

நன்றி.

— அன்பின் சுஹன்பாபு

(R-1424)


## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 05 - 31

1985 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் சிறிலங்காப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமடைந்த

நாதன் (இளையதம்பி பாக்கியநாதன் - காரைதீவு)

இதே ஆண்டு மூதூர் தங்கநகரிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு கந்தளாய் பாலத்தருகே படுகொலை செய்யப்பட்ட

- ❀ குலேந்திரன் (கிளிவெட்டி)
- ❀ செல்வராசா நவரட்ணராசா (கிளிவெட்டி)
- ❀ குமார் (சதாசிவம் திருக்குமார் - கிளிவெட்டி)
- ❀ மாயவன் (மயில்வாகனம் மகேந்திரன் - கிளிவெட்டி)
- ❀ ரங்கா (குணசேகரம் - தங்கநகர்)
- ❀ சுந்தரலிங்கம் (தங்கநகர்)
- ❀ மாஸ்ரர் (குமாரகுலசிங்கம் - தங்கநகர்)
- ❀ அமிர்தகுலசிங்கம் (தங்கநகர்)
- ❀ கந்தசாமி (இராசையா தங்கன் - தங்கநகர்)
- ❀ ராஜு (இராஜேந்திரன் - திருமலை)

இதே சம்பவத்தில் உயிரிழந்த 28 பொதுமக்கள்

இதே ஆண்டு நிலாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 6 பெண்கள், 2 ஆண்கள், ஒரு குழந்தை

1986 ஆம் ஆண்டு சிறிலங்கா படைகளின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த மனோகரன் (மாரிமுத்து இராமநாதன் - குச்சவெளி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❀ மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

: விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 2589)

# புனர்வாழ்வு நிதி பற்றாக்குறையால் விண்ணப்பங்கள் தேங்கிக்கிடக்கின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் புனர்வாழ்வு வேலைகளுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் நிதி போதுமானதாக இல்லை.

கடந்த பல ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு புனர்வாழ்வு அமைச்சு இதுவரை வழங்கிய நிதி எந்த வகையிலும் போதுமானதாக இருக்கவில்லை என்றும் ஏற்பட்ட பாதிப்புகளில் ஒரு பகுதிக்கு மட்டுமே நிவாரணமளிப்பதற்கு போதுமானதாக இருந்தது என்றும் யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய, இலங்கை இராணுவ நடவடிக்கைகளினால் உயிரிழந்தமைக்காக நிவாரணம் கோரி கடந்த ஏப்ரல் மாதம் வரை 4400 விண்ணப்பங்களும், காயமடைந்தவர்களுக்கு நிவாரணம் கோரி 1500 விண்ணப்பங்களும், யாழ். செயலகத்துக்குக் கிடைத்த போதிலும் இதுவரை மேற்படி இருவிடயங்கள் தொடர்பான விண்ணப்பங்களிலும் சுமார் 2210 விண்ணப்பங்களுக்கு மட்டுமே நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

வீடு உடைக்கப்பட்டமைக்காக நிவாரணம்கோரி ஒரு லட்சத்து ஆறாயிரத்து ஐந்நூறு விண்ணப்பங்களும், தொழில் இழந்தமைக்காக அறுபத்தைந்தாயிரத்து எழுநூறு விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்ற போதிலும் மேற்படி இருவிடயங்கள் தொடர்பான விண்ணப்பங்களிலும் சுமார் முப்பத்தொன்பதினாயிரத்து இருநூற்றுத் தொண்ணூறு விண்ணப்பங்களுக்கு மட்டுமே இதுவரை நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எனினும் காயமடைந்த அனைவரும் நிவாரணத்திற்காக விண்ணப்பிக்கவில்லை என்பதுடன் அண்மைக் காலங்களில் விண்ணப்பித்த சகல விண்ணப்பங்களும் செயலகத்திற்கு கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த ஆண்டு ஜுன் மாதம் முதல் வடகிழக்கு பகுதிகளில் புனர்வாழ்வு அமைச்சின் வீடமைப்பு மற்றும் வீடுதிருத்துதல் போன்ற புனர்வாழ்வுத்திட்டங்கள் முற்றாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இத்திட்டங்களுக்கும் நடைமுறையில் இருக்கும் பூர்த்தியாக்கப்படாத புனர்வாழ்வுத் திட்டங்களுக்குமிய கொடுப்பனவுகளுக்கும் 250 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் தேவை என்று செயலக புனர்வாழ்வுப்பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

புனர்வாழ்வு அமைச்சுக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக போதுமான நிதி ஒதுக்கீடு கிடைத்த போதிலும் இதுவரை திறைசேரியால் இந்த அமைச்சுக்கு நிதி வழங்கப்படாமையாலேயே மாவட்ட செயலக புனர் வாழ்வுப்பகுதியினருக்கு நிதி வழங்கப்பட முடியாதநிலைமைபுனர்வாழ்வு அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது என கொழும்பில் இருந்து எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினருக்கு அண்மையில் கிடைக்கப்பெற்ற சுமார் எண்பது மில்லியன் ரூபா இம் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக உயிரிழந்தமைக்காக நிவாரணம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கப்படவிருப்பதாக செயலகத்தில் இருந்து இறுதியாக எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

## நஞ்சருந்தி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக குடும்பப்பெண் ஒருவர் நச்சுத் திரவம் அருந்தி தற்கொலை செய்துள்ளார்.

கட்டைப்பிராயைச் சேர்ந்த முத்தம்மா (வயது 30) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார். (ச)

## இன்டரக்ற் கழகம் உடுபுடைவைகள் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் தீவகப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு சீருடைக்கான துணிகளையும் பொதுமக்களுக்கு உடுபுடைவைகளையும் உணவுப் பொருள்களையும் இன்டரக்ற் கழகம் வழங்கியுள்ளது.

யாழ் திருக்குடும்பக்கன்னியர் மடத்தைச் சேர்ந்த மேற்படி கழகம் பொதுமக்களிடமிருந்து பெற்ற உடுபுடைவைகளையும் 19,500 ரூபாவிற்கு நூற்றி எழுபத்திஏழு மீற்றர் துணியைக் கொள்வனவு செய்து அதனைத் தீவகப் பகுதி சொத்தணி அதிபரிடம் ஒப்படைத்துள்ளனர். மேலும் புனித சூசையப்பர் மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோருக்கு காலை உணவையும் வழங்கினர்.

## குரங்கு கடித்து 6 பேர் காயம்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டைக் கூழாவடிப்பகுதியில் குரங்குகள் கடித்ததால் காயமடைந்த ஆறு பொதுமக்கள் நேற்றுக் காலை தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

மேற்படி பகுதியில் பொதுமக்கள் தமது வீடுகளில் குரங்குகளை வளர்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களால் வளர்க்கப்படும் மேற்படி குரங்குகளே இவ்வாறு நேற்றுக்காலை ஆறு பொதுமக்களைக் கடித்துள்ளன. (ச)

## இடம் பெயர்ந்த 2½ இலட்சம் மக்கள் குடாநாட்டில் வாழ்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் யாழ். மாவட்டத்தில் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் பொதுமக்கள் தமது சொந்த வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து வாழ்க்கையைத் தொடர்கின்றனர்.

சிறிலங்கா அரசின் முப்படைகளினதும் தாக்குதல் நடவடிக்கைகள் காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வெளிமாவட்டங்களில் இருந்தும் இடம்பெயர்ந்த இம்மக்கள் முகாம்களிலும், தமது உறவினர்களின் வீடுகளிலும் வாழ்கின்றனர்.

இடம் பெயர்ந்த மக்களுக்காக இம்மாவட்டத்தில்சுமார் 205 முகாம்கள் தற்பொழுது செயற்பட்டு வருகின்றன.

இம்முகாம்களில் சுமார் 1500 குடும்பங்களும் தமது உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் சுமார் 28,000 குடும்பங்களும் தங்கிதமது வாழ்க்கையை தொடர்கின்றனர்.

இவற்றை விட வெளிமாவட்டங்களில் இருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சுமார் 7000 குடும்பங்கள் இம் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் போதிய இருப்பிடம் மற்றும் மருத்துவ, சுகாதார வசதிகள் அற்ற நிலையிலும் வாழ்கின்றனர். (ச)

## புதிய பிரதமர் பதவி ஏற்பு

நேபாளிய காங்கிரஸ் தலைவர் கிரிஜா பிரசாத் கொயிலாலா நேபாளத்தின்புதியபிரதமராகநேற்றுமுன்தினம்பதவியேற்றார்.

நரேந்திரநிவாஸ் மாளிகையில் அவர்நேற்று முன்தினம் பிரதமர்பதவியினை ஏற்றுக்கொண்டார். மன்னர் பிரேந்திரா அவருக்குபதவிப்பிரமாணம்செய்து வைத்தார்.

முன்னதாக கடந்த செவ்வாயன்று பிரதம மந்திரி பிரசாத் கொயிலாலா தமதுஅமைச்சர்களின் பெயர்ப்பட்டியலை மன்னர் பிரேந்திராவிடம் சமர்ப்பித்திருந்தார்.

## திறந்தபல்கலைக் கழகத்தில் புதியபாட கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் புதியபாடகற்கைநெறியொன்றுஆரம்பமாகவுள்ளது.

கல்வியாண்டு 91 / 92 ஆம் வருடத்திற்கான விஞ்ஞானமானி தொழில் நுட்பவியல் டிப்ளோமா பாடநெறிக்கே தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறியினைபயில விரும்புவோர் அதற்கானவிண்ணப்பங்களை யாழ் பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பயில விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் விஞ்ஞானம் கணிதம் உட்பட ஆறுபாடங்களில்சித்தியடைந்திருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் இதற்கான வகுப்புகள்ஆரம்பமாகவுள்ளன இதன் விரிவுரைகள் தமிழ், ஆங்கில மொழியில் நடைபெறும்.

இதற்கான விண்ணப்பங்களை அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்குமுன் யாழ். பிராந்திய நிலையத்திற்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இவர்களுக்கான முதல் நிலைப் பரீட்சை எதிர்வரும் ஜுன் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ச)

## ஆலோசனை சபைக்கூட்டம்

காரைநகர் துயர் துடைப்புச் சங்க ஆலோசனை சபை உறுப்பினர்களுக்கான முக்கிய கூட்டம் வரும் திங்கட்கிழமை (3.6.91) காலை 9-30 மணியளவில் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் அகில உலக செயர் ஸ்தாபனத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள மேற்படி பணிமனையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியுள்ளதால் ஆலோசனை சபை அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## திருமுறைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

திருமுறைப் பெருவிழா ஒன்று யாழ்.நகரின் சில இடங்களில் நேற்று வியாழக்கிழமை முதல் நடைபெறுகிறது.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் இவ்விழாவினை நடாத்துகின்றனர். இன்றுவெள்ளிக்கிழமை அருள்மிகு சட்டநாதர் ஆலயத்திலும் சனிக்கிழமை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்திலும் இவ்விழா நடைபெறும்.


## பாலம்

பாலத்தின் உணவகம் ஆரம்பமாகும்பொழுது
அது ஆரம்ப விழா. அது 25 வருடம்
ஆகும்போது அது வெள்ளிவிழா.
இதுவே உண்மை.

நன்றி.

— அன்பின் சுஹன்பாபு

(R-1424)



## நினைவு கூருகின்றோம்...

**1991 - 05 - 31**

1985 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் சிறிலங்காப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமடைந்த

நாதன் (இளையதம்பி பாக்கியநாதன் - காரைதீவு)

இதே ஆண்டு மூதூர் தங்கநகரிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு கந்தளாய் பாலத்தருகே படுகொலை செய்யப்பட்ட

- குலேந்திரன் (கிளிவெட்டி)
- செல்வராசா நவரட்ணராசா (கிளிவெட்டி)
- குமார் (சதாசிவம் திருக்குமார் - கிளிவெட்டி)
- மாயவன் (மயில்வாகனம் மகேந்திரன் - கிளிவெட்டி)
- ரங்கா (குணசேகரம் - தங்கநகர்)
- சுந்தரலிங்கம் (தங்கநகர்)
- மாஸ்ரர் (குமாரகுலசிங்கம் - தங்கநகர்)
- அமிர்தகுலசிங்கம் (தங்கநகர்)
- கந்தசாமி (இராசையா தங்கன் - தங்கநகர்)
- ராஜு (இராஜேந்திரன் - திருமலை)

இதே சம்பவத்தில் உயிரிழந்த
28 பொதுமக்கள்

இதே ஆண்டு நிலாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட
6 பெண்கள், 2 ஆண்கள், ஒரு குழந்தை

1986 ஆம் ஆண்டு சிறிலங்கா படைகளின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த
மனோகரன் (மாரிமுத்து இராமநாதன் - குச்சவெளி)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

: விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2589)


0

# சன்மானம்

மரண அமைதியில் மூழ்கிக் கிடந்த அந்தக் கிராமம் இன்றுதான் மூச்சு விட்டது. கடந்த பத்து நாட்களாக இராணுவ நடவடிக்கைகளால் மிரண்ட மக்கள் படலையில் நிற்பவராயும், கடந்த நிகழ்வுகளை அசை போடுபவராயும் இருந்தார்கள். அவர்களின் முகத்திலிருந்து பயத்தின் சாயல் முற்றாக நீங்கவில்லை. சில வீடுகளில் அழுகுரல்கள் மகனைக் காணாத தாய், கணவனைத் தேடும் இளம் மனைவி, இப்படி எத்தனையோ... இத்தனைக்கும் மத்தியில் அடங்கிக் கிடந்த சிறுவர்கள் தெருவில் கூச்சலிட்ட வண்ணம் இங்கும் அங்கும் ஓடிபவராக இருந்தார்கள். நந்திக் கடலின் ஓரமாக இருந்த அந்தக் கேப்பாபுலவுக் கிராமத்தில் இப்படியொரு சோதனையை அவர்கள் சந்திக்கவில்லை. ஒரு பக்கம் பெரிய காடாகவும், மறுபக்கம் நல்ல விளை நிலத்தையும், கடல் வளத்தையும் பெற்ற மக்கள் வெளி உலகத்தைப்பற்றி அவ்வளவு கவலைப்படுவது கிடையாது தாமும் தம்பாடும். இன்று தமிழர் நிலத்தில் ஏற்பட்டிருக்கும் நிகழ்வுகள் அவர்களை அப்படியொன்றும் ஆட்டிப்படைக்கவில்லை. அமைதியாக இருந்த அவர்களுக்கு இப்படியொரு சோதனையா? அவர்களால் தாங்கக் கூடியதாக இருக்கவில்லை. இராணுவத்தின் அடாவடித்தனத்தை நினைக்க நினைக்க அவர்களை நடுக்கமே ஆட்கொண்டது. விழிகள் பிதுங்குகின்றன.

சிறிது நேரத்திற்கு முன் வெளியேறிய அந்த மனித மிருகங்கள் திரும்பவும் இருட்டும் வேளையில் தங்கள் கிராமத்திற்கு வருவார்களா? என்ற பயம். இல்லை வரமாட்டார்கள் என்ற தெம்பு. இத்தனைக்கும் மத்தியில் அந்தப் பத்து நாட்களையும் உருட்டிக் களித்த சூரியன் பதினோராவது தினத்தை முடிக்க மேற்கு காட்டு மரங்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். ஏன் இந்த இரவு. நடக்கும் கொடுமையை ஒளித்தடம் போட உதவும் இரவு மீது ஒருவித வெறுப்பு. வேதனை.

கேப்பாப்புலவு பாடசாலைச் சுவரிலே ஏதோ பெரிய படங்கள் ஒட்டிக் கிடப்பதாக சனங்கள் கதைப்பதும், பார்க்கப் போவதுமாக இருந்தார்கள். பொன்னம்மா அந்தக் கிராமத்தில் கொஞ்சம் படித்தவள். அவளுக்கு அதை வாசிக்க வேண்டுமென்ற ஆவல் ஆனால் தம்பியைக் காணாததாயும், தகப்பனும் தவிக்கும் போது தான் விடுப்புப் பார்க்கப் போவதை நினைக்க என்னவோ போல் இருந்தது இருந்தாலும் இராணுவம் கொண்டு போனவர்களின் பெயர்ப் பட்டியலாக அது இருக்கலாம் என்ற உணர்வு.

அம்மா பள்ளிக்கூடத்தில ஏதோ ஒட்டிக் கிடக்காம், பாத்திட்டு வாறன். "அந்தத் துலைவாங்கள் என்னத்தை ஒட்டப் போறாங்கள். கண் கெடுவாங்கள் இரவு வந்தாலும் வருவாங்கள்"

"இல்லையணே தம்பியைப் பற்றி ஏதாவது இருந்தாலும் இருக்கலாம். நான் கெதியா வாறன்"

"கவனமடி புள்ள கோப்பர் தம்பியைப் பார்க்க புலவுப் பக்கம் போட்டார் வந்திடுவார் கெதியா வா"

கொடியில கிடந்த சீலையை அள்ளிச் செருகிக் கொண்டு படலைக்குள் வந்ததும் தகப்பனும் சகோதரனும் தூரத்தே வந்து கொண்டிருந்ததைக் கண்டுவிட்டாள்.

பாரமாக இருந்த மடிச்சுமை கொஞ்சம் இறங்கினாலும், பாடசாலை நோட்டீஸ் பார்க்க வேணும் என்ற ஆவல் தூண்ட அந்த நாட்டு மாட்டுக் கன்று ஓடும் வேகத்தில் பாடசாலையை நோக்கி ஓடினாள் பொன்னம்மா.

பாடசாலையில் ஒரு சின்னக் கூட்டம் திரண்டிருந்தது. எல்லோரும் சுவரில் ஒட்டிய படங்களைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அது தான் லோரன்ஸ். இது சபா, உது ஜீவா, இவன் கொக்குத்தொடுவாய் மருதலிங்கப்பாவின் மகன்.

ஆயிரத்தை எண்ணாத கிராமத்தில் லட்சம். அவர்களில் யாருமே அப்படி அந்த லட்சத்தை அலட்டிக்கொள்ளவில்லை. ஏதோ மினிப்படப் போஸ்டர்களைப் பார்ப்பது போல் பார்த்தார்களே யொழிய வேறு விமர்சனங்கள் ஒன்றும் இல்லை.

"பொன்னம்மாகொண்ணை வந்திட்டான் கெதியாய் போ வீட்டை" தருமவின் குரல்.

"ஓமணை அப்பு"

"ஆர் செல்வரோ"? இது தருமரின் கேள்வி.

"என்ன தருமு"



சிறுகதை

முருகேசு

"இவனைத் தெரியுமோ இவன்தான் கந்தையற்ற மகன். நல்ல பெடியன், ஒரு பிள்ளை. செம்மலையில எங்கட பெடியனோட படிச்சவன்".

ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்த புராணத்தை அரைகுறையாகச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

பொன்னம்மா எல்லோரையும் விலத்திக் கொண்டு ஒட்டப்பட்ட படங்களைப் பார்த்தாள். அவளுக்குத் தெரிந்த முகங்கள் ஒன்றும் இல்லை. அவள் அந்தக் கிராமத்தை விட்டுப் போவதானால் வற்றாப்பளை அம்மன் கோயில், ஏதாவது நோய் வந்தால் முல்லைத்தீவு ஆஸ்பத்திரி, அதுதான் அவள் கண்ட உலகம்.

படத்தைத் திரும்பவும் பார்த்தாள். அவளுக்கு அத்தனை படங்களிலும் ஒரு பிடிப்பு, பாசம், உறவு. ஏன் என்பது அவளுக்கே விளங்கவில்லை. இவர்களை ஏன் ஒட்டி இருக்கிறார்கள்? காட்டிக் கொடுத்தால் லட்சம் சன்மானம். உயிரோடு என்றாலும் சரி, உயிர் இல்லாமல் என்றாலும் சரி.

"துஞ்ச பாரடா நாங்கள் கொக்குத்தொடுவாயில மாடு வாங்கின கந்தையற்ற பெடியல்"

தருமர் வடிவாகப் பார்க்கிறார். "ஓமடா"

தருமரின் மூளை விரைவாக வேலை செய்கிறது. தருமர் அந்தக் கிராமத்தில் கொஞ்சம் விசயம் தெரிஞ்சவர் குள்ளர், எல்லாரும் சகுனித்தருமர் என்று தான் சொல்லுவார்கள். தருமர் நோட்டீசைக் கவனமாகப் படிக்கிறார். ஒரு லட்சம்... ஒரு லட்சம்.

தருமற்றை வீட்டுத் திண்ணையில அந்தப் பெடியன் ஓம். அந்தப் பெடியன் கனகுவுடன் கதைத்துக் கொண்டிருக்கிறான்.

அன்டைக்குத்தான் தன்ரை பெடியன்ர பெருமை தருமுவுக்கு விளங்கிச்சுது தன்ரை ஆசைக்குத் தீனி போட கனகு இப்படி ஒரு உதவியாய் இருப்பான் என்று அவர் கனவு கூடக் காணவில்லை.

சோர்வுடன் திண்ணையில் படுத்திருந்த சபாவிடம் தருமு "என்ன தம்பி என்னைத் தெரியுமோ? நான் உங்கட வீட்ட நாம்பன் வாங்க வந்தது நினைவிருக்கோ?"

"ஓமோம் நல்ல நினைவு"

"தம்பி ஏதாவது குடிச்சியளோ"

"ஓமப்பு மோர் குடிச்சனான். கொஞ்சத்தில சோறு உவிஞ்சிடும்"

"நான் ஒருக்கா புலவுக்குப் போகவேணும் தம்பிக்குச் சாப்பாட்டக் குடுத்துப் படுக்க விடுங்கோ"

"அப்பு சாப்பாடு"

"இப்ப வேண்டாம்"

"ஏனெணை?"

"அவசர வேலை இருக்கு ஒருக்காப் போய்வாறன்"

பொன்னம்மா "அப்பு எங்கை அவசரமாய்போறாய் ஒருக்கா இஞ்சை வா"

"ஏனடி போகேக்கை குறுக்காலை சனியன் பிடிச்ச மாதிரி"

"கனகு இஞ்சை வந்திட்டுப் போவன்" கொஞ்சம் அதட்டலாக.

"என்னடா சனியன்கள்" இது தருமுவின் குரல்.

"இப்ப எங்க அவசரமாக" ஏககாலத்தில் இரண்டு இளசுகளும்

"நான் புலவுக்கு"

"ஏன் என்டு கேட்கிறம்"

"அவசர அலுவல்"

"அதுதான் என்ன?" கொஞ்சம் அதட்டலாக, தருமருக்கு தைச்சது இவங்கள் ஏதோ

"எட கனகு நீ பள்ளிக்கூடம்போகேல்லையே" உவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)



கவிதை

# மைந்தா நீ மறவனாய் மாறு!

காப்பு

தும்பிக்கையானே துதிசெய்தேன் என்துணைவா
நம்பிக்கை தொழுதெழுந்து நவின்றிடுவேன் -
என்றும்
துப்பாக்கி துணைகொண்டு தமிழ்நாடு
காணபோர்க்குத்
தம்பாமற் தானுதவி தா!

வெண்பா

செந்தமிழ் உரிமைச்சேறு கலக்கிட
வெந்தழல வீழினும் அஞ்சேன் - எம்
பைந்தமிழ் அன்னையாள பல்லூழி வாழ்ந்திட
மைந்தா நீ மறவனாய் மாறு!

பாரண்ட தமிழினம் பதறித் துடித்திட்டே
வேரோடு சாயததிடல் நன்றோ - என்றும்
அந்தமில எம்மொழி அவனியை யாண்டிட
மைந்தா நீ மறவனாய் மாறு!

சிறைச்சாலை சென்றங்கு சீவனே போனாலும்
மறக்காமற் தமிழென்று சொல்வேன் - என்றும்
எந்தமிழ் மாதா ஏறறத்தைப் பெற்றிட
மைந்தா நீ மறவனாய் மாறு!

சிங்களம் வென்றெம் சீர்குலைத்திடேங் காலை
செங்களம் வீழினும் துஞ்சேன் - எங்கள்
சொந்தம தானதமிழ் ஈழத்தைப் பெற்றிட
மைந்தா நீ மறவனாய் மாறு!

நலமுடன் அன்று நாடாண்ட நந்தமிழ்
பலமிழந் தழிந்திடல் நன்றோ - எங்கள்
சுந்தரத் தமிழினைத் துலங்கிடச் செய்குவோம்
மைந்தா நீ மறவனாய் மாறு!

(துரையப்பாவினுடைய காருக்கு வெடிகுண்டு வைத்த தாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது சிவகுமாரன் எழுதிய கவிதை)

நன்றி : (சுதந்திரன் 14-07-74)

# பண்பாட்டுப் படுகொலையின் பத்தாண்டு நிறைவு

1981 மே 31, தமிழீழ மக்கள் மட்டுமல்ல உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் தம் நினைவிலிருந்து மறைய முடியாத நாளாக மாறியது. சிறிலங்காவின் பொலிசாரும், ஆயுதப்படையினரும் தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளிக்கும் கடமையை ஏற்றவர்களல்ல என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டிய நாளாகவும் இது அமைந்தது இந்தத் தினத்தில் நீறாகிப்போனவை கள் யாழ்ப்பாண நூலகத்தின் 97 000 புத்தகங்களும் கிடைத்தற்கரிய கையெழுத்துப் பிரதிகளும் மட்டுமல்ல; இலங்கைத் தீவின் ஒற்றையாட்சியும், சமாதான சகவாழ்வும் கூடத்தான்.

தமிழீழம் பெறுவதற்கான சரிவசன வாக்கெடுப்பெனக் கூறிக்கொண்ட கூட்டணியினர் மாவட்ட அபிவிருத்திச் சபைகளே போதும் என்று மண்டியிட்ட நேரம். பொங்கிவரும் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்கும் அணையாக மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மலரும் என்று தமிழ் மக்களை நம்பவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளை. புலிப்படைத் தடைச் சட்டமும், அதனால் பெரும்பாலான இளைஞர்களும் பாதிக்கப்பட்டமை வன்முறை வழிமுறையை நாடியமையினாலேயே எனப் பிரசாரம் செய்துவந்த சந்தர்ப்பம். ஆயுதமேந்தாத அகிம்சை வழிப் போராட்டத்தின் மூலம் தமிழீழ தாயகத்தை விடுவிப்பதன் முதற்கட்டமே மாவட்ட அபிவிருத்திச் சபை எனத் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசுக்கு சார்பாக ஒத்தூதி வந்த வேளை இது.

இந்தப் பின்னணிச் சூழ்நிலையிலேயே மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கு

## இளையவன்

ஒரு திங்களுக்கு முன்பாக ஈழநாடு பத்திரிகை அலுவலகம், யாழ் நூல்நிலையம் உட்பட யாழ்ப்பாண நகரம் தீக்கிரையாக்கப்பட்டது.

### ஏன் இந்தத் தீவைப்பு?

தமிழ் மக்கள் தமது தனித்துவத்தைக் காப்பாற்றும் பண்பாட்டு ஆதாரங்களை அழித்தொழிக்கக் கங்கணம் கட்டியே திட்டமிட்ட வகையில் இந்நூலகம் எரிக்கப்பட்டது. ஐ. தே. கட்சிக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள சிரேஷ்ட அமைச்சர்களான காமினி திசாநாயக்கா, லலித் அதுலத்முதலி, சிறில் மத்தியூ முதலானோர் யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்த வேளையிலே இப் பண்பாட்டுப் படுகொலை அவர்களது கண் முன்னாலேயே நிகழ்ந்தேறியது ஆயுதப்படையினரும் பொலிசாரும் சேர்ந்து இந் நூல்நிலையம் உட்பட தீக்கிரையாக்கும் கைங்கரியத்தைச் செய்து முடித்தனர். இந்தத் தீவைப்பு தமிழ் மக்கள் இலங்கைத்தீவின் ஒற்றையாட்சிக்குள் கட்டுப்பட்டு அடிமையாக இருக்க வேண்டுமென்னும் சிறிலங்கா அரசின் அச்சுறுத்தலை எடுத்துக்காட்டியது. சிறிலங்கா அரசு தமிழ் மக்களை மட்டுமல்ல அவர்களது பண்பாட்டுக் கூறுகளையும் அவற்றுக்கான சான்றுகளையும் அழித்தொழிக்க கங்கணம் கட்டி நிற்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டும் நிகழ்வாக இத் தீவைப்பு அமைந்தது.

எனினும் அழிவுகளிலிருந்து மீண்டும் உயிர்த்தெழும் ஆர்வம் தமிழ் மக்களுக்கு உண்டு என்பதை இந்தப் பத்தாண்டு நிகழ்ச்சிகளும் சான்று பகரும் எந்தக் கோட்டை முகாமிலிருந்து வந்தோரால் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டதோ, அந்தக் கோட்டையை நோக்கி நூலகத்தின் இடிபாடுகளுக்குள்ளிருந்தும் எறிகணைகள் ஏவப்பட்டன. இரவு பகலெ

( 6ஆம் பக்கம் பார்க்க )

# தமிழீழ ஆயுதப் போராட்டத்தின் முன்னோடியான

# மாவீரன் பொன். சிவகுமாரன்

சயனைட் என்ற சொல் உச்சரிக்கப்படும்போது, அதை விளக்கும் போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் சயனைட்டுக்குமுள்ள தொடர்பை தள்ளி வைத்து விட்டு அதனை விளக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. சயனைட் வைத்திருப்பதை மரபாகக் கொண்டவர்கள் தமிழீழ விடுதலைப் போராளிகள் என்று உலகின் மூலை முடுக்குகளிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் குறிப்பிட்டு வருகின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன்முதல் ஆயுதம் ஏந்திப் போராடி வீரமரணமடைந்தவன் சிவகுமாரனே. சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த இவன் எக்கணத்திலும் எதிரியின் கையில் உயிரோடு பிடிபடக் கூடாது என்ற செய்தியை போராளிகளுக்கு விட்டுச் சென்றுள்ளான். இவன் சயனைட் அணிந்தது காலத்தின் தேவையால். தமிழத் தேசிய உணர்வுமிக்க இளைஞர்கள் எல்லாம் சிறிலங்கா அரச படையினரால் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டு அவர்களுடன் தொடர்பு கொண்டவர்கள் மீதும் படையினரின் கவனம் திரும்பிய போது தான் போராட்டத்தைக் காப்பாற்ற இப்படியானதொரு முடிவுக்கு வந்தான் சிவகுமாரன்.

உயர்கல்வியில் தமிழ் மாணவர்களுக்கு தரப்படுத்தல் ஏற்படுத்தப்பட்டதையடுத்து 7ம் ஆண்டளவில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவனாக விளங்கியவன் சிவகுமாரன். இந்தத் தமிழ் மாணவர் பேரவையில் இருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் தலைவர் பிரபாகரன், கிலகத்துரை, உரும்பராய் பொன். சத்தியசீலன் திசைவீரசிங்கம் ஆகியோர். இந்த மாணவர் பேரவையே விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பதளமானது. இந்த அமைப்பைச் சேர்ந்த சில இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டு சிறிலங்கா அரசுக்கும், தமிழ்த்துரோகிகளுக்கும் எதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்தான் சிவகுமாரன். தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு உலை வைக்கும் தரப்படுத்தலை அமுல்படுத்திய சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசின் துணை அமைச்சராக இருந்த சோமவீரசந்திரசிறிக்கு தனது சொந்த ஊரான உரும்பராய்க்குப் பக்கத்தில் சிலர் வரவேற்புக் கொடுக்க ஏற்பாடு செய்ததைக் கண்டு கொதித்தெழுந்த சிவகுமாரன் அந்தத் துணை அமைச்சரின் காருக்கு நேரக் கணிய வெடி (ரைமபொம்) வைத்தான். அதிலிருந்து சிங்கள அமைச்சர் தப்பியபோதிலும் அச்சம்பவம் பற்றிய குற்றச்சாட்டின்பேரில் அரசபடையினரால் கைது செய்யப்பட்டான். அவர்கள் இவனைச் சித்திரவதைகள் செய்தார்கள். இவனோடு தொடர்புள்ளவர்களை அறிய முயன்றார்கள். ஆனால் இவனிடமிருந்து எந்த உண்மையையுமே அவர்களால் அறிய முடியவில்லை. அச்சம்பவத்திற்கு நேரடிச் சாட்சியங்களும் இல்லாத நிலையில் அவன் விடுதலை செய்யப்பட்டான். ஆனால் அவன் ஓய்ந்திருக்கவில்லை.

வடபகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கட்சிக்கு தலைமைத் தரகராக இருந்து தமிழினத்தின் உரி



தியாகி சிவகுமாரன்

மைக்குரலை நசுக்கும் வகையில் செயற்பட்டு வந்த யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா மீது குறிவைத்தான். நீண்ட நாள் முயற்சியின்பின் 1971ஆம் ஆண்டில் ஒருநாள் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இருந்த பிரீமியர் கபேக்கு முன்னால் வைத்து துரையப்பாவின் காருக்குள் நேரக்கணிய வெடிகுண்டை வைத்தான். சக்திவாய்ந்த அந்த வெடிகுண்டு நேரம் தவறாமல் வெடித்தது. ஆனால் அந்த வேளையில் துரையப்பா காரில் இல்லாததால் உயிர்தப்பிவிட்டார். அந்தக் கார் முற்றாகச் சேதமடைந்தது. அதைத் தொடர்ந்து மீண்டும் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டான் இரண்டரை வருடங்களுக்குமேலாக மல்லாகம் நீதிமன்றத்தில் துரையப்பா கொலை முயற்சி வழக்கு நடைபெற்றது.

கறுப்புக் கோட் போட்டவர்களுக்கே அரசியல் நடத்தத் தெரியும். அவர்களே தமிழ் மக்களின் இரட்சகர்கள் என்ற நிலை அப்போது நிலவியது. இவ்வாறு மிகவும் பிரபலமான சட்டத்தரணிகள் கூட்டத்தைக் கொண்ட தமிழர் கூட்டணியைச் சேர்ந்த எந்தச் சட்டத்தரணிகளுமே இவனுக்காகவாதாட முன்வரவில்லை. இந்த இரண்டரை வருட காலமும் தவணைகளை இருந்த ஒரே வீடு உட்பட்ட தனது சொத்துக்களையெல்லாம் விற்று வழக்காடினார் சிவகுமாரனின் அன்னை. இந்த சிவகுமாரனின் பெயரைத்தான் பிற்காலத்தில் தமது வாக்கு வேட்டைக்குப் பயன்படுத்திக் கொண்டனர் தமிழர் கூட்டணியினர்.

23வயதுக்குள் மூன்று ஆண்டுகளைச் சிறையில் கழித்த சிவகுமாரனுக்கு அந்தச் சிறை வாழ்க்கை பல அனுபவங்களைத் தந்தது. போராளிகள் கைதானால் சக போராளிகளையும் போராட்டத்துக்கு உதவும் ஆதரவாளர்களையும் சித்திரவதைக்குள்ளாக்குவர். அச்சித்திரவதைக்குத் தாக்குப் பிடிக்கமுடியாமல் கைதாகும் போராளி எதனையாவது கூற நேரிட்டால் அது போராட்டத்தை முளையிலேயே கருகச் செய்துவிடும் என்பதைஅவன் அனுபவபூர்வமாக உணர்ந்திருந்தமையால் அரச படையினரிடம் பிடிபடும் நிலை ஏற்பட்டால் போராளிகள் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும். அதன் மூலம் போராட்டத்தைக் காப்பாற்ற வேண்டும் என முடிவெடுத்தான்.

சிறிலங்கா அரசுக்கெதிரான போராட்டங்களை நடத்திய வேளையிலும்இந்தியா பற்றிய ஒரு தெளிவான கொள்கை இவனுக்கு இருந்தது. இந்தியாவுடன் இலங்கையைஇணைக்க வேண்டும் என்ற நோக்கையை முன்வைத்த இந்திய அரசின் ஏஜண்டுகளை அம்பலப்படுத்துவதிலும் இவன் கரிசனையாக இருந்தான்.

நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் போது நிகழ்ந்த படுகொலைகளுக்குக் காரணமான A.S.P சந்திரசேகராவைக் கொலைசெய்யும் நோக்குடன் சில கைக்குண்டுகளைத் தயாரித்தான். யாழ். மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் A.S.P சந்திரசேகராவுக்கெதிரான தாக்குதலைத் தொடுத்தான் கைக்குண்டுகளும் அவனது ரிவால்வரும் காலை வாரிவிட்டதனால் இவனது முயற்சி கைகூடவில்லை இதைடபோலவே விடுதலைப் போராளிகளை காட்டிக் கொடுத்துவந்தவரும் உரும்பராய் பெற்றோல் நிலைய உரிமையாளர் நடராசா மீதான நடவடிக்கையும் இவனுக்கு வெற்றியைக் கொடுக்கத்தவறிவிட்டன. இதனைத் தொடர்ந்து இவனைக் கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு ஐயாயிரம் ரூபா சன்மானம் என சிறிலங்கா அரசு அறிவித்தது.

இந்நிலையில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்த இவன் தனது பாதுகாப்புத் தேவைகளுக்காக ஆயிரம்ரூபா தேவையென கூட்டணிப் பிரமுகர்களை அணுகியபோது

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழர் வரலாற்றுடன் பிணைந்துவிட்ட யூன் ஐந்து

இலங்கைத் தீவின் வரலாற்றில் குறிப்பாக இலங்கைத் தமிழரின் வரலாற்றில் ஜூன் மாதம் 5ஆம் திகதி தொடர்ச்சியாக ஏதோ ஒரு வகையில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. அத்தகைய வரலாற்றுச் சம்பவங்கள் இடம்பெற்ற ஆண்டுகளை தொகுத்து நோக்குதல் சிறப்பானதாகும்.

### 1915

1915 ஆம் ஆண்டு மேமாதம் 29 ஆம் திகதி முதல் ஜூன் 5 ஆம் திகதி வரை சிங்கள முஸ்லிம் இனக் கலவரம் நடைபெற்றது.

### 1949

1949 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தைச்சேர்ந்த தீவிர இடதுசாரித் தொழிற்சங்கவாதி கந்தசாமி கொலன்னாவையில் வைத்து சிங்கள இனவாதிகளால் அடித்துக் கொல்லப்பட்டார்.

### 1956

இந்த ஆண்டு ஜூன் 5ஆம் திகதி தான் இலங்கைத்தமிழர் மொழி மீதான ஒடுக்குமுறை ஆரம்பமானது. அன்றுதான் இலங்கைப் பாராளுமன்றத்தில் 33 ஆம் இலக்க சிங்களம் மட்டும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு எதிராக அன்றைய தினம் காலிமுகத்திடலில் தந்தை செல்வா தலைமையில் ஒரு சாத்வீகப் போராட்டம் இடம்பெற்றது. இப்போராட்டத்தில் பங்குபற்றிய சத்தியாக்கிரகிகள் மீது சிங்களக் காடையர்கள் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். இதைத் தொடர்ந்து கொழும்பின் சில பகுதிகளிலும் அம்பாறைப் பகுதியிலும் தமிழ்ப்பொதுமக்கள் தாக்கப்பட்டனர். துறைநீலாவணைப்பகுதியில் தீரமிக்க இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி சிங்கள ஒடுக்குமுறையாளர்களை ஓட ஓட விரட்டியடித்தனர்.

### 1963

இந்த ஆண்டு ஜூன் 5ஆம் திகதி சென்னையிலுள்ள



கவிஞர் காசி ஆனந்தன்

இலங்கையின் உதவித் தூதரகத்தின் முன்னால் கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் ஒரு முழுநாள் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது. இப்போராட்டமே இலங்கைத்தமிழர் பிரச்சினை தொடர்பாக முதன் முதல் இலங்கைக்கு வெளியே நடத்தப்பட்ட ஒரு உண்ணாவிரதப் போராட்டமாகும். இந்த சாத்வீகப்போரை இந்தியாவின் முன்னாள் மகாதேசாதிபதி மூதறிஞர் ராஜாஜி அவர்கள் சத்தியாக்கிரகிகளுக்கு குளிர்பானம் வழங்கி முடித்துவைத்தார்.

### 1974

ஆயுதப் போராட்டத்தின் முன்னோடியாக இலங்கைத் தமிழ் மக்களால் போற்றப்படும் உரும்பராயைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவகுமாரன் தியாகமரணமடைந்த நாள் இந்த ஆண்டு ஜூன் 5 ஆம் திகதியாகும்.

### 1980

இந்த ஆண்டு ஜூன் 5ஆம் திகதி தென்னிலங்கையில் இடதுசாரி தொழிற்சங்கவாதியான சோமபாலா என்ற தொழிலாளி அப்போதைய கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் சிறில்மத்யூ தலைமையிலான ஜாதிகசேவாசங்கமய என்ற தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களால் கோரமாகக்கொல்லப்பட்ட நாளாகும்.

### 1981

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் ஜூன் 4 ஆம் திகதி மாவட்ட சபைத் தேர்தல் இடம்பெற்ற நாட்கள் வரை யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா படைகள் புரிந்த அட்டூழியங்களுக்கும், அனர்த்தங்களுக்கும், படுகொலைகளுக்கும் எதிராக மாபெரும் ஹர்த்தாலும் கடையடைப்பும் யாழ்குடா வெங்கும் இடம்பெற்றது.

### 1985

1985 ஆம் ஆண்டு இதே தினம் மூதூர்ப்பகுதியில் பல தமிழ்க்கிராமங்கள் சிங்களக் காடையர்களாலும், முஸ்லிம் காடையர்களாலும் தாக்கப்பட்டன ஏறக்குறைய 70க்கு மேற்பட்ட தமிழ்ப்பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் ஒரே நாளில் கோரமாகக்கொல்லப்பட்டனர்.

### 1986

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் பெரும் சண்டை மூண்டது இவ்வருடம் ஜூன் ஐந்தாம் திகதி ஆகும். பரவலாக விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன. கிளிநொச்சி மாவட்டத்தைப் போராளிகளது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான ஆரம்பக்கட்டமாக இம்மோதல்கள் வர்ணிக்கப்பட்டன.

### 1987

இவ்வருடம் ஜூன் 5 ஆம் திகதி காலி மாவட்டத்திலுள்ள பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 9 தமிழ் இளைஞர்கள் அங்கேயே வைத்து இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு:

ரங்கசாமி மகேஸ்வரன் (முன்னேஸ்வரம் சிலாபம்), கந்தப்பன் சுமிநாதன் (தம்பிலுவில் மட்டுநகர்), நடேசன் காந்தன் (திருக்கடலூர் திருமலை) செல்லையா பாலேந்திரன் (கொக்கட்டிச்சோலை மட்டுநகர்), சிவராசா தர்மராசா (சிலாமுனை மட்டுநகர்), கந்தையா ஜீவராசா (கிளிநொச்சி), அருளப்பு இருதயராசா (வவுனியா) சின்னத்தம்பி தருமராசா (ஸ்ரேசன்வீதி மாங்குளம்) தர்மலிங்கம் செந்தூரன் (பூநகரி கிளிநொச்சி).

### 1988

மட்டக்களப்பைச் சேர்ந்தவரும் அப்பகுதிப் பிரஜைகள் குழு பிரமுகருமான வணக்கத்துக்குரிய பிதா சந்திரா பெர்னாண்டோ ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுவொன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜூன் மாதம் வெளியான இந்தியச் சஞ்சிகையொன்றில் ''இந்தியப்படையானது ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம்'' என்ற கருத்தில் இவரது செவ்வியொன்று வெளியானதால இந்தியப்படைக்குச் சார்பான குழுவினரால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவந்தது.

### 1989

புத்தூர் கண்டிக்காட்டில் மேஜர் சுந்தர்சிங் தலைமையில வந்த இந்தியப்படையினரால் ஒன்பது பொது மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் பரமேஸ்வரன் முரளிதரன் மானிப்பாயில் வைத்து இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டான். வரணியில் நான்கு விடுதலைப் புலிகளும், புத்தூரில் இரண்டு விடுதலைப்புலிகளும், மட்டுவில் பகுதியில் ஒரு விடுதலைப் புலியும் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## புதிய கைத்தொழில் மயமாகும் நாடுகளில்

# மரபாகிவரும் ஆளும் கட்சிகளின் தேர்தல் வெற்றி

*சிறிலங்காவில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலையொட்டி சாரணனால் எழுதி கடந்த 14ஆம் திகதி புலிகளின் குரல் வானொலியில் வாசிக்கப்பட்ட கட்டுரை.*

புதிய கைத்தொழில் மயமாகும் நாடுகளில (Nic) பதவியில் இருக்கும் ஆளும் கட்சிகள் தேர்தல்களில் வெற்றி பெறுவது ஒரு புதிய மரபாகி வருகின்றது சிங்கப்பூர் தென்கொரியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இத்தகைய ஒரு போக்கே கடந்த காலத்தில் நிலவியுள்ளது. இந்த வரிசையில் இலங்கையும் ஒன்றாக இன்று காணப்படுகின்றது.

1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ. தே. க, அரசாங்கம் தொடர்ந்தும் மூன்றாவது முறையாகப் பதவிக்கு வந்ததுடன் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் அது தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளது இவ்வாறு ஆளும் கட்சியே தொடர்ந்து தேர்தல்களில் வெற்றி பெறுவதன் இரகசியம் என்ன? இதற்கான விடை மிகவும் இலகுவானது. இது இலங்கைக்கு மட்டுமே உரிய ஒரு தனிவிசேட அம்சமல்ல. புதிய கைத்தொழில் மயமான நாடுகள் அனைத்திலும் இதுவே நிகழ்ந்துள்ளது.

எனவே புதிய கைத்தொழில் மயமாக்கலின் ஒரு பண்பு என்னவெனில் அக்கொள்கையை அமுலபடுத்த ஆரம்பிக்கும் அதே கட்சியே தொடர்ந்து பதவிக்கு வருவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளது என்பதுதான் சிங்கப்பூர், தென் கொரியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் புதிய கைத்தொழில மயமாக்கல் நிகழத் தொடங்கியதும் அங்கு தொடர்ந்து ஒரே கட்சிகள் பதவியில் இருந்தன. மாக்கோஸும், லீ-குவான்-யூவும் இதற்குச் சிறந்த உதாரணங்கள்.

புதிய கைத்தொழில்மயமாக்கல் கொள்கைகள் அமுலுக்கு வரும் போது அதனுடன் சேர்ந்தே புதிய அரசியல் இராணுவக் கொள்கைகளும் பதவிக்கு வந்து விடுகின்றன. எனவே இப்புதிய கைத்தொழில் மயமாக்கலானது புதிய பொருளாதார, அரசியல், இராணுவ அம்சங்கள் அனைத்தையும் கொண்டு பின்னிப்பிணைக்கப்பட்ட ஒரு பலம் பொருந்திய அம்சமாக உருவெடுத்து விடுகின்றது. இதன் தவிர்க்க முடியாத வெளிப்பாடே ஆளும் கட்சிகள் தொடர்ந்து வெற்றி பெறுவதற்கான வாய்ப்பாகும். இப்பின்னணியிற்தான் பிரேமதாஸாவின் தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல்களின் வெற்றியையும் நோக்க வேண்டும்.

முதலில் இக்கொள்கையிலுள்ள பொருளாதார அம்சத்தைக் கருத்திற்கெடுப்போம் என்று பல்வகைப் பண்டங்கள் மக்களின் கண்ணுக்குத் தெரியக்கூடியதாய் சந்தையிற் குவிகின்றன பொருள்கள் கண்முன் குவிவதனால் அபின் போன்ற போதைப் பொருள்களில் ஏற்படுவது போன்று பொருள்களின் மீது மக்களுக்கு பழக்கம் ஏற்படுகின்றது. 1970-77 வரை பதவியில் இருந்த சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் பொருள்களைக் காண முடியாதிருந்த வெறுமையிலிருந்து மக்கள் தற்போது விடுபட்டுள்ளார்கள். இந்தப் பொருள் சார்ந்த போதைக்கு மக்கள் ஆட்படுகிறார்கள்.

புதிய கைத்தொழில் மயமாக்கல் கொள்கையில் உள்ள அடுத்த அம்சம் மக்களுக்கு அனைத்தும் காட்சிமயப்படுத்தப்படுதல் ஆகும். புதிய கைத்தொழில் மயமாக்கல் கொள்கையின் நிமித்தம் ஓர் ஆடம்பரமான, சுறுசுறுப்பான செயற்பாடு நகரங்களுக்கு ஏற்பட்டுவிடுகின்றது. இந்தக் கவர்ச்சியும் சுறுசுறுப்பும் மக்களை அதனைநோக்கி உந்துகின்றது. பிரேமதாஸாவின் 10லட்சம் வீடு கட்டும் திட்டம் காட்சிமயப்படுத்தும் செயல்தான் மக்களின் கண் முன் அந்த வீடுகள் காட்சி அளித்து அபிவிருத்தியின் நற்சாட்சிப் பத்திரம் போன்ற தோரணையைவை கொடுக்கின்றன. தொலைக்காட்சி மக்களின் கண்முன் இந்தக் காட்சிகளைப் படம் பிடித்து மீண்டும் மீண்டும் காட்டுவதன் மூலம் ஒரு காட்சிப் பிமபத்தையே மக்களின் மனதில் உருவாக்கியும் விடுகின்றது.

எனவே புதிய கைத்தொழில் மயமாகும் நாடுகளில் கட்புலனாகும் ஒரு புதிய தோற்றம், உண்மையில் ஒரு மாயைத் தோற்றம் மக்களின் மனங்களில் படிந்து விடுகின்றது. புதிய கைத்தொழில் மயமாக்கல் கொள்கை இலங்கை போன்ற நாடுகளுக்கு நீண்ட கால நோக்கில் முழு நாட்டையும் மக்களையும் அடகு வைக்கும் ஒரு சாபமேயானாலும் உடனடி நோக்கிலிருந்து பார்க்கும்போது அது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஓரளவு உதவுகின்றது அத்துடன் வாழ்வுக்கான நம்பிக்கைகளையும், பகட்டான பாதைகளையும் திறந்து விட்டது போன்ற நம்பிக்கையையும் மக்களுக்குக் கொடுக்கின்றது. இதனால் இக்கொள்கையை அமுல்படுத்தத் தொடங்கிய கட்சியை மக்கள் தொடர்ந்தும் பதவியில் அமர்த்த விரும்புகின்றார்கள்.

இவ்வாறாகப் பொருளாதாரக் கொள்கை அமையும் அதேவேளை இதனுடன் கூடவே புதிய அரசியல இராணுவக் கொள்கைகளும் உருவாகிவிடுகின்றன. இத்தகைய புதிய கைத்தொழில் மயமாக்கக்கொள்கை அந்நிய சக்திகளுக்கு பலவகை அனுகூலங்களை உள்நாட்டில் உருவாக்கி விடுகின்றது. ஆதலினால் அந்நிய சக்திகளின் கரங்கள் அரசியல் ரீதியாக உள்நாட்டில் ஓங்குகின்றது. அந்த அந்நிய சக்திகள் தமது நலன்களுக்கு ஏற்ப நாட்டை வடிவமைத்து விடுவார்கள் அந்த வடிவத்தில் இந்த நாட்டின் நிலை மாறாதிருக்க ஆளும் கட்சியைப் பலப்படுத்துவார்கள். இதற்காகப் பல்வகை உளவு வேலைகளையும், பொருத்தமான அரசியல் வேலைகளையும் செய்து அரசைப் பாதுகாப்பதுடன். உடனடி நெருக்கடியிலிருந்து ஆளும் கட்சி மீண்டும் மக்களின் ஆதரவைப் பெறத்தக்க வகையில் நிதி,கடன் உதவிகளை இந்த வெளிநாட்டு நிறுவனங்கள் செய்யும் வெளிநாட்டு நிறுவனங்களின் இத்தகைய மாயாஜால வித்தைகளும் மக்களை ஏமாற்றி ஆளும் கட்சி வெற்றியைத் தேடிக் கொடுத்து விடுகின்றது.

தமது மாயக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கிசில உடைதரித்த ஒரு தனிப்பட்ட இராணுவத்தை இப்படியான அரசுகள் உருவாக்குகின்றன. ஆசியாவில் இப்படிப்பட்ட இராணுவத்தை உருவாக்கிய முன்னோடி மாக்கோஸ் ஆவார். இருபது வருடங்கள் ஆட்சி செய்த மாக்கோஸ் ஷா போன்றவரின் உடல்களைப் புதைக்க அவர்களின் சொந்தமண்ணிலேயே ஒரு குழி மண் தானும் கிடைக்கவில்லை என்பதை பிரேமதாசா அரசு விளங்க வேண்டும். இது அச்சுறுத்தல்களையும், அடையாளம் காணப்படாத கொலைகளையும் செய்யும். இதன் மூலம் பலவீனமான எதிரணியுடன் தேர்தல் போட்டியில் ஈடுபடும். போட்டி முடிவில் ஆளும் கட்சி தேர்தலில் வெற்றி பெற்றதான தோரணை தெரியவரும். எனவே இந்த வெற்றிக்குப் பின்னால் ஒரு மாயையும் அச்சுறுத்தலும் இருக்கின்றது. பிரேமதாஸாவின் உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியும் இத்தகையதே மக்கள் முன்பு ஜனநாயகம் வெற்றி பெற்றுள்ளதாகக் காட்டப்படும். இந்த வெற்றியின் காட்சி அடுத்த வெற்றிக்கான அத்திவாரத்தை இடும். மக்கள் இவ்வாறாக மூன்று அல்லது நான்கு தடவைகள் ஏமாறுவார்கள். இறுதியாக மாக்கோஸையும், ஷாவையும் தூக்கி எறிந்தது போல மக்கள் ஐ. தே. கவையும் தூக்கி எறிவார்கள். பிரேமதாஸாவின் வெற்றியும் மாக்கோஸையும் ஷாவையும் நோக்கிய பிரயாணம் தான்.

---

### தமிழீழ ஆயுதப்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது சிறுபிள்ளை விளையாட்டு எனக் கருதிய அவர்கள் இவனது கோரிக்கையை நிராகரித்து விட்டனர். எனவே 1974ஆம் ஆண்டு ஜூன் 5இல் கோப்பாய் இராமிய வங்கிப் பணத்தை விடுதலைப் போராட்ட நிதிக்குப் பயன்படுத்தும் நோக்குடன் அங்குசென்றான். அங்கு பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் இவன் சயனைட் உட்கொண்டான். அதுவரை அவன் தனது துப்பாக்கி ரவைகள் தீருமட்டும் சண்டை போட்டான். அவனது தியாக வாழ்வு தமிழ் இளைஞர்கள் மத்தியில் போராட்ட உணர்வை வளர்த்தது.

இவனது ஈமக்கிரியைகளில் 50,000 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர், தமிழ் மக்களின் அழுகை ஒலி வானைப் பிளந்தது. தமிழீழத்தில் முதல் தடவையாக பெண்களும், மாணவிகளும் நடைமுறை மரபுகளை எல்லாம் மீறி மயானத்துக்கு வந்து சிவகுமாரனுக்கு தம் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர், வடமாகாணத்தில் அவரது இறுதி அஞ்சலிக்கு வந்த கூட்டம் போல் யாருக்கும் அதுவரை கூடவில்லை அம் மாவீரன் சாவிலும் சரித்திரம் படைத்தான்.

'செய்து முடி அல்லதுசெத்து மடி, என்ற இலட்சிய தாகம் சிவகுமாரன் தன் வாழ்வினூடே விட்டுச்சென்ற வைர வரி எந்த விதமான சுயநல எதிர்பார்ப்பும் இல்லாமல் தான் சார்ந்த மக்களுக்காகப் பணியாற்றிய மாணிக்க மைந்தனான சிவகுமாரன் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் கலங்கரை விளக்கமாகினான். அதனால் தான் அவனது சிலை கூட ஆட்சியாளருக்கு சிம்மசொப்பனம் ஆகியது. அவனது சிலையை அகற்றி தமிழ் மக்களின் மனதிலிருந்து அவன் நினைவை அகற்ற முயற்சித்த சிறிலங்காப் படைகள் இரண்டு தடவைகள் சிலையை தகர்க்க முயற்சித்தன. ஆனால் அம் முயற்சி கூட கைகூடாமல் சிதைவடைந்த சிவகுமாரன் சிலை இன்றும் கூட உரும்பராய் சந்திக்கருகே இருக்கின்றது. இதற்கடுத்ததாக பூங்காவுடன் கூடிய புதிய சிவகுமாரன் சிலை கடந்த வருடம் விடுதலைப் புலிகளால் நிறுவப்பட்டது.

இவனுக்காக வழக்காட முன்வராத இவனது தேவைகளைப் பூர்த்தி செய்ய மனமில்லாத கூட்டணியினர் இவனது பெயரை வாக்குப் பெறும் மந்திரமாக உச்சரித்தனர். அதேவேளை இவனது கனவுகளை, இவனது இலட்சியத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

---

### சன்மானம்...

(4ஆம் பக்கத் தொடர்)

அந்த நோட்டீசில பார்த்தவர் தானே? உத்தப்பெடியன் அவன்தான் இப்ப உவங்கள் ஆமிக்காரர் பேராற்றுப்பாலத்தடியில் நிப்பாங்கள், நான் கூடிவாறன். ஒரு லட்சம்... என்றார்.

பொன்னம்மாவுக்கு உலகமே இருண்டது. தங்கள் மண்ணை மீட்க எவ்வளவுகாலம் எங்கட சனம் கஷ்டப்படுகுது, "எங்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை உண்டாக்க எவ்வளவு துன்பத்தைச் சுமக்கினம்"

"ஓமடி அவங்கள் கொள்ளையடிக்கிறதுதெரியாதோ?"

"எணையப்பு எல்லாரையும் அப்படிச் சொல்லாதை நாட்டின் விடிவுக்கு தங்களையே அழித்துக் கொண்டிருக்கும் இவர்களைக் காட்டிக்கொடுப்பது எவ்வளவு பாவம்"

"பாவத்தைப்பற்றி எனக்கே சொல்லுறாய் அதுவும் இந்த தருமுவுக்கு"

"அப்பு இப்ப என்ன செய்யப்போறாய்"

"அப்படிக் கேளடா? இவனைப்பிடிச்சுக் கொடுத்திட்டு ஒரு லச்சம்...

"அதுதான் முடியாது"

"முடியுமடா... நடத்திக் காட்டுறன்" தருமு விரைவாக நடக்கத் தொடங்குகிறார்.

"அப்பு... அப்பு... இது பொன்னம்மாவின் குரல்.

"அப்பு"

தருமர் திரும்பவில்லை.

முற்றத்திக்கிடந்த உலக்கை விடியின் சின்னமாக... நியாயத்தின் பாதுகாப்பாக... புதுச் சமுதாயத்தை உருவாக்கும் படைக்கலமாக பொன்னம்மா அப்பு... அப்பு. அட துரோகி... தருமரின் தலையில் பலமாக உலக்கை விழுகிறது.

ஐயோ... ஐயோ... பொன்... ன... ம்... மா. சரியானதுதான் அவளும் நாளை சரித்திர நாயகிதான்.

---

### பண்பாட்டுப்...

(4 ஆம் பக்கத் தொடர்)

வர்கள் தஞ்சாமல் அஞ்சா நெஞ்சமுடன் போராடிய விடுதலைப் புலிகள் திரத்தால் கோட்டை இடிக்கப்பட்டது. இப்பாய்கள் பறந்தோட வேண்டியதாயிற்று. நூலகம் அமைந்திருந்த பகுதிகள் இந்தக் காலப்பகுதியில் நிகழ்ந்த தேறிய சம்பவங்களின் காட்சியாக இன்னமும் அங்கே இந்தக் கற்களுக்கு அல்லது இப் பகுதியில் நிற்கும் மரம்,செடி கொடிகளுக்கு மட்டும் பேசும் திராணியிருந்தால் இந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றையும் ஓராயிரம் தடவை எடுத்தோதும் என நிச்சயம் நம்பலாம்.

---

## இரத்தத்தில் மருந்தின் அளவை கண்டறிய புதிய வழி

இரத்தத்தில் உள்ள மருந்துப் பொருள்களின் அளவைக் கண்டறிவதற்கான ஒரு புதிய முறை இந்திய மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த முறையைக் கண்டுபிடித்தவர் இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தின் தலைவர் ஏ. எஸ் பெயின்டல் ஆவார். இரத்தத்தில் உள்ள மருந்துகளின் அளவைக் கண்டறிவதற்கு இதுவரையில் பயன்படுத்தக் கூடிய முறை அதிக செலவானது, அத்துடன் சிக்கலானது. இந்தப் புதிய முறையில் தேமிஸ்ரர் என்றழைக்கப்படும் சிறிய கருவி இரத்தத்தினுடைய வெப்ப நிலையை பதிவு செய்து அதன் மூலம் இரத்தத்தில் கலந்துள்ள மருந்தின் அளவைக் கண்டறிகிறது.

---


## செய்தியாளர் தேவை

ஈழநாதத்திற்குச்செய்தியாளர்கள் தேவை. செய்திகள் சேகரிப்பதில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி ஜூன் மாதம் மூன்றாம் திகதியாகும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

ஈழநாதம், 31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

## கிளின்கட் அறிவித்தல்

உரிமையாளரின் சுகயீனம் காரணமாக மறு அறிவித்தல் வரை ஸ்தாபனம் மூடப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

(B-2593)

# எரித்திரிய விடுதலையை வல்லரசின் துரோகம்; இயற்கை வஞ்சனையும் தடுக்க முடியவில்லை

எதியோப்பியா கிளர்ச்சிக்காரரிடம் வீழ்ந்து விட்டது. இதன் மூலம் 1977 ஆம் ஆண்டில் இருந்து எதியோப்பியாவில் ஆட்சியில் இருந்த இடதுசாரி அரசாங்கம் கவிழ்க்கப்பட்டுள்ளது. அதேவேளை எதியோப்பியவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள எரித்திரியா அதன் விடுதலைக்காகப் போராடிய போராளிகளின் பூரண கட்டுப்பாட்டினுள் வந்துள்ளது. இதே போல் ரிக்றீ, வோலோ மாகாணங்களில் சுயாட்சிக்குப் போராடிய போராளிகளிடம் அப்பிரதேசங்கள் வந்துள்ளன.

## எதியோப்பியா

எதியோப்பியா சுமார் 1,22,500 சதுர கிலோ மீற்றர் பரப்பையும், 45 958 750 மக்களையும் கொண்டதாகும். இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் உட்பட பல சமயத்தவரும் பல மொழிபேசும் மக்களையும் கொண்ட நாடு ஆகும்.

எரித்திரியா 1,17.400. சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் 2,951,086 சனத்தொகையையும் கொண்ட பிரதேசமாகும். இங்கு கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் சம அளவில் பரந்துள்ளனர்.

ரிக்றீ, வோலோ ஆகிய இரு மாகாணங்களும் 1,44,700 ச. கிலோ மீற்றர் பரப்பும் 6,316,380 மக்கள் தொகையும் கொண்டவை ஆகும்.

## போராளி இயக்கங்கள்

இதில், எதியோப்பியாவில் இருந்த மொஸ்கோ சார்பு இடதுசாரி அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தை எதியோப்பியா மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி (ஈ. பி. ஆர். டி. எப்.) முன்னெடுத்தது. எரித்திரியா விடுதலைப் போராட்டத்தில் எரித்திரியா விடுதலை மக்கள் முன்னணி (ஈ. பி. எல். எப்) பிரதான அமைப்பாக இருந்தது. அதேவேளை, எரித்திரியா விடுதலை முன்னணி (ஈ. எல். எப்.) என்ற போராளி அமைப்பும் செயற்பட்டது. மேலும், எரித்திரியாவிற்கு அண்டைய மாநிலங்களான ரிக்றீ, வோலோ மாகாணங்களில் ரிக்றீ மக்கள் விடுதலை முன்னணி (ரி பி. எல். எப்) அம்மாகாண மக்களின் சுயாட்சிக்காகப் போராடியது.

## எதியோப்பியா வரலாறு

எதியோப்பியா 1974 ஆம் ஆண்டுவரை மன்னராட்சி நிலவிய நாடாகும். 1974 இல் ஏற்பட்ட இராணுவப் புரட்சியின் மூலம் மன்னர் கவிழ்க்கப்பட்டார். அதுவரை எதியோப்பியா ஒரு அமெரிக்க சார்பு நாடாகவும் இருந்தது. எதியோப்பியாவின் கடைசி மன்னரான ஹெயில் செலசி காலத்திலேயே எதியோப்பியாவுடன் எரித்திரியா நிலப்பரப்பு இணைக்கப்பட்டது.

இத்தாலியின் காலனியாக இருந்த எரித்திரியா பகுதி இரண்டாம் உலக மகாயுத்தத்துடன் பிரித்தானியரின் நேரடி நிர்வாகத்தினுள் வந்தது. அவ்வேளை எதியோப்பியாவும் பிரிட்டனின் நிர்வாகத்தில் கொண்டு வரப்பட்டது. இந்நிலையில் 1950 இல் ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தின் படி எரித்திரியா எதியோப்பியாவுடன் இணைக்கப்பட்டது இந்த இணைப்பிற்கு சோவியத் யூனியன் எதிர்ப்பு தெரிவித்த போது இணைப்புச் செயற்படுத்தப்பட்டது. அதேவேளை இணைப்பினைத் தொடர்ந்து எரித்திரிய விடுதலைப் போராட்டமும் ஆரம்பித்தது.

1984 ஒக்ரோபரில், அப்பொழுது அங்கு ஏற்பட்ட உணவுப்பஞ்சத்தினைப் பயன்படுத்தி கெரில்லாக்கள் வசமுள்ள ரிக்ரீ, வூலோ பிரதேசங்களிலிருந்து 15 இலட்சம் மக்களை அடபிரதேசத்தில் வசித்து வந்த மக்களின் காற்பங்கினரை மேற்குப் பிரதேசங்களான வெலிகா, கோயம் பிரதேசங்களுக்குக் கொண்டு சென்று குடியமர்த்த எதியோப்பிய அரசாங்கம் திட்டமிட்டது இவர்களுக்கு குடியிருப்பு நிலம் பயிர்ச்செய்கை நிலம், கால்நடைகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது இத்திட்டம் ஏற்கனவே அரசாங்கத்தால் 1973-74 இல் நடைமுறைப்படுத்த முயற்சிக்கப்பட்டதாகும்.

T.P LF கெரில்லாக்கள் மிகப்பெரிய நிவாரண முகாமொன்றைக் கைப்பற்றி மக்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகித்ததன் மூலம் இத்திட்டம் தடுக்கப்பட்டது.

## எரித்திரிய போராட்ட ஆரம்பம்

1962ஆம் ஆண்டு எரித்திரிய மக்கள் விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்திற்கு எரித்திரிய மூஸ்லிம்கள் தலைமை தாங்கினர். ஆனால், பின்னர் இயக்கத்திற்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக எரித்திரியா மக்கள் விடுதலை முன்னணி என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1970இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் கிறிஸ்தவ தலைமை கொண்டதாக இருந்தது.

எரித்திரிய விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகிய காலகட்டம் சர்வதேச ரீதியில் கெடுபிடி யுத்தம் உச்சகட்டத்தில் இருந்த காலகட்டமாகும். அவ்வேளையில் எதியோப்பியமன்னர் ஹெயில் செலசிக்கு அமெரிக்காவின் ஆதரவு நிறைய இருந்ததைத்தொடர்ந்து எரித்திரிய விடுதலைப் போராளிகளுக்கு பெருமளவு உதவி சோவியத் யூனியனால் கிடைக்கப் பெற்றது. அத்தோடு சூடான் எல்லை ஓரத்தில் தளவசதிகளும் கிடைக்கப்பெற்றன.

## எதியோப்பியாவில் ஆட்சி மாற்றம்

ஆனால் 1974 இல் மன்னர் இராணுவப்புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து சோவியத்யூனியனுக்கும் எரித்திரிய போராளிகளுக்குமிடையில் இருந்த உறவில் விரிசல் ஏற்படத்தொடங்கியது. 1977 பெப்ரவரியில் மற்றுமொரு இராணுவப் புரட்சி மூலம் லெப் கேணல் மென்கிஸ்ரு ஹெயில் மரியம் ஆட்சிக்கு வந்ததும் நிலைமை முற்றாக மாறியது.

எதியோப்பியாவில் ரஷ்யா அமைப்புடைய கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றது; ஆனால் எரித்திரியா தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. எதியோப்பியாவில் தமக்கு சாதகமான ஆட்சி ஏற்பட்டதும் சோவியத்யூனியனும் எரித்திரியாவைக் கைவிட்டது.

## எதியோப்பியாவுக்கு சோவியத் இராணுவ உதவி

அதேவேளை சோவியத் பெருமளவு இராணுவ உதவிகளையும் எதியோப்பியா

## இவ்வார நோக்கு

விற்கு செய்தது 250 இராணுவ ஆலோசகர்கள் எதியோப்பியாவில் நிலை கொண்டனர். சோவியத் கடற்படைக்கு எதியோப்பிய செங்கடல் துறைமுகமான அசாப்பில் தளவசதியும் கொடுக்கப்பட்டது. மேலும் சோவியத் நட்பு நாடான கியூபாவின் 15,000 இராணுவத்தைக் கொண்ட டாங்கிப்படைப்பிரிவு ஒன்றும் எதியோப்பியாவில் நிலை நிறுத்தப்பட்டது.

சோவியத கியூப இராணுவ ஆலோசகர்களும் படைப்பிரிவுகளும், சோமாலியாவுடன் எதியோப்பியாவிற்கு 'ஓகாட்டன்' பாலைநிலம் தொடர்பாக 1977 இல் நிகழ்ந்த போரை சாட்டாக வைத்து வந்து சேர்ந்தன.

எதியோப்பியாவில் சோவியத் சார்பு அரசாங்கம் ஏற்பட்டதும் எரித்திரியா போராட்டத்தில் சில நெருக்கடிகள் உருப்பெற்றதாயினும் போராட்டம் தொடர்ந்தது. அத்தோடு சூடானும் தனது எல்லைக்குள் இருந்த எரித்திரிய போராளிகளின் முகாம்களையும் மூடிவிட்டது. இந்நிலையினை 1987 இல் இலங்கைப் போராளிகள் தொடர்பாக இந்தியா கடைப்பிடித்த நிலையினுக்கு ஒப்பிடலாம்.

ஆனால்' 1977இல் சோமாலியா எதியோப்பியப் போரை எரித்திரியப் போராளி இயக்கமான எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி தனக்குச் சாதகமானதாகப்பயன்படுத்தி எரித்திரியாவின் பெரும் நிலப்பரப்பை-முழுமையாக என்றே சொல்லலாம் - விடுவித்துக் கொண்டன ஆனால், இந் நிலைமை தொடர்ந்து நீடிக்கவில்லை. சோமாலியாவுடன் போரில் வென்ற எதியோப்பியா, ரஷ்யா, கியூபா ஆகியவற்றின் இராணுவ ஆலோசனையுடன் எரித்திரியா மீது இராணுவ நடவடிக்கை மேற்கொண்டது. ஒரு லட்சம் இராணுவத்தினர் எரித்திரியாவிற்குள் அனுப்பப்பட்டனர். எரித்திரியாப் போராட்டம் பெரும் தோல்விகளைச் சந்தித்தது.

## எதியோப்பிய பஞ்சம்

மேலும் 1980 களின் ஆரம்பத்தில் எதியோப்பியாவைப் பெரும் பஞ்சம் தாக்கியது. தொடர்ந்தாற் போல் பலவருடங்கள் நிலவிய வரட்சியினால் இப்பஞ்சம் ஏற்பட்டது. இதில் எரித்திரியா, ரிக்றீ மாகாணங்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டன மக்கள் பட்டினியால் பெருமளவில் இறந்தனர் அத்தோடு எதியோப்பிய அரசாங்கம் அரசியல் நோக்கத்தினைக் கொண்டு சர்வதேச ரீதியாகக் கிடைத்த நிவாரணங்களையும், பொருள்களையும் எரித்திரியா, ரிக்றீ, வோலோ மாகாணங்களுக்கு அனுப்பாமல் தடை செய்தது. மக்கள் பெரியளவில் இடம் பெயர்ந்து சூடானுக்குள் சென்றனர்.

அதேவேளை, நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தை அடிப்படையாகக் கொண்டு எதியோப்பிய அரசாங்கம் மக்களிடம் இருந்து போராளிகளை பிரிக்கக்கூடிய திட்டம் ஒன்றை வெளியிட்டது. ரிக்றீ, வோலோ மாகாணத்தில் இருந்து பதினைந்து லட்சம் மக்களை மேற்கு எதியோப்பியாவில் குடியமர்த்தும் திட்டமே இதுவாகும்.

ஆனால் ரிக்றீ போராளிகள் அரசாங்கத்தின் பெரியதொரு நிவாரண பொருள்கள் சேமிப்பு கிடங்கை 48 மணி நேரச் சண்டையில் கைப்பற்றி ஒரு லட்சம் மக்களுக்கு நிவாரண பொருள் விநியோகம் செய்ததன் மூலம் இம்முயற்சி முறியடிக்கப்பட்டது

சோவியத்யூனியன் செய்த துரோகம், சூடானில் வசதிகள் மறுக்கப்பட்டமை, பிரதேசத்தில் ஏற்பட்ட கொடும் பஞ்சம் என்பன எரித்திரியப் போராட்டத்திற்கு பல பின்னடைவுகளைத் தந்தபோதும் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி போராட்டத்தைக் கைவிடவில்லை. அத்தோடு தமது இலட்சியத்தில் இருந்து பின்னடையவுமில்லை.

## இயக்க மோதல்

இதேவேளை, எரித்திரிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த எரித்திரிய மக்கள் முன்னணி (ஈ. எல். எவ்) யேமனின் மத்தியஸ்தத்துடன் எதியோப்பிய அரசாங்கத்துடன் பேசச் சம்மதித்தது; இப்பேச்சுவார்த்தையில் ஈ.எல்.எப் சுயாட்சித்திட்டத்தை முன்வைத்தது. ஆனால் இத்திட்டம் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியினால் நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில் 1988 செப்டம்பரில் இரு பகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக இருதரப்பிலுமாக 6000 போராளிகள் மரணமடைந்தனர். அதன் பின்னர் 1989 ஜனவரியில் இருபகுதியினருமே தனி அரசுக் கோரிக்கையை முன்வைத்தனர். இந்நிலையிலும் பெருமளவு எரித்திரிய நிலப்பரப்பு போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன.

## சர்வதேச அரசியலில் மாற்றம்

இந் நிலையில், சர்வதேச அரசியலில் ஏற்பட்ட பெரிய அளவிலான மாற்றங்கள் எதியோப்பிய அரசியலை வெகுவாகப் பாதித்தன.

சோவியத்யூனியனில் கொர்ப்பசேவால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் பாதித்தது போன்று எதியோப்பியாவையும் பாதித்தது.

சோவியத்தின் உதவி பெருமளவில் குறைக்கப்பட்டமை எதியோப்பியாவைப் பெரிதும் நெருக்கடிக்குள் இட்டுச் சென்றது. மேலும் கியூபத் துருப்புகள் 1989 செப்டம்பரில் எதியோப்பியாவை விட்டு வெளியேறின.

1980 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து தொடர்ச்சியாக நாட்டில் ஏற்பட்டு வந்த வரட்சியால் ஏற்பட்ட பஞ்சமும், ஆட்சியில் இருந்தவர்களின் சர்வாதிகாரப்போக்கும் உள்நாட்டில் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்தன. அரசிற்கெதிராக மக்கள் போராட்டமும் வலுவடைந்தது.

## அமெரிக்காவுடன் நல்லுறவு பேண முயற்சி

அதே வேளை, சோவியத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து எதியோப்பியா அமெரிக்காவுடன் நல்லுறவை வளர்ப்பதற்கு விரும்பிய போதும் அமெரிக்கா அதனை விரும்பவில்லை ஆட்சிக் கவிழ்ப்பொன்றையே எதிர்பார்த்துச் செயற்பட்டது அதே வேளை அமெரிக்க அரசாங்கத்தையும் ஏனைய மேற்குலகத்தையும் திருப்திப்படுத்தும் முகமாக எதியோப்பிய ஜனாதிபதி சில ஜனநாயக சீர்திருத்தங்களைச் செய்வது போன்று காட்டிக்கொள்ளமுற்பட்டார் அதன் பிரகாரம் பன்னிரண்டு வருடங்களின் பின்னர் 1987 இல் சர்வசன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டு புதிய அரசியலமைப்புக் கொண்டு வரப்பட்டது. பின் ஜூன் மாதம் நடைபெற்றதேர்தலில் லெப். கேணல் ஹெலி மரியம் 96 வீத வாக்குகள் பெற்று ஜனாதிபதியானார். எதியோப்பிய தொழிலாளர் கட்சி என்ற அவரது கட்சிஉறுப்பினர்களைக்கொண்ட சபை ஒன்றும் அமைக்கப்பட்டது; ஆனல் அவரது முயற்சிகள் பயனளிக்கவில்லை.

## போராட்டம் தீவிரம் பெற்றது.

இந்நிலையில், எதியோப்பியாவில் இயங்கிய அரசிற்கெதிரானபோராளிகளுக்கும், எரித்திரியாவிடுதலைப்போராளிகளுக்கும் ஏனைய போராளிகளுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு அடிப்படையில் போராட்டம் தீவிரம் அடைந்தது. அடிஸ் அபாபா அரசாங்க எதிர்ப்பு போராளிகளை ஈ.பி ஆர்.டி.எவ் இடம் வீழ்ச்சி அடைவது நிச்சயம் என்பதை உணர்ந்த ஜனாதிபதிஇருவாரங்களுக்கு முன் நாட்டை விட்டு தப்பி ஓடினார். அடிஸ் அபாபாவும் வீழ்ச்சி அடைந்தது. எரித்திரியப் போராளிகள் தமது பிரதேசத்தில் கடைசியாகஎஞ்சியிருந்த கப்பற்படைத்தளத்தையும், துறைமுகத்தையும்தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

## சமாதான மாநாடு

எதியோப்பியாவில் உள்நாட்டுப் போர் இறுதிக் கட்டத்தை அடைந்தபோது அமெரிக்கா போராளிகளும் அரசாங்கங்களும் பங்கு பற்றும் ஒரு மாநாட்டைக் கூட்டியது ஆனால் அது ஒரு கண் துடைப்பாகும்; உண்மையில் எதியோப்பியா அரசாங்கம் கவிழ்க்கப்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா அக்கறையாக இருந்தது. ஆகையினால் ஈராக்கில் சதாம் ஹுசைனுக்கெதிரான போராட்டத்தில் கிளர்ச்சியாளர்களைக் கைவிட்டது போன்று எதியோப்பிய கிளர்ச்சியாளர்களைக் கைவிட அமெரிக்கா விரும்பவில்லை.

இந்நிலையில் எரித்திரியா பற்றிய அமெரிக்காவின் தற்போதைய முடிவு இன்னமும் தெளிவுற முன்வைக்கப்படாத நிலை எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியின் அறிவிப்பு அமெரிக்காவிற்கு சில நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடியதாகும்.

அதாவது இலண்டன் மாநாடு இடையில் நிறுத்தப்பட்டபோது அமெரிக்கப் பிரதிநிதி ஜூலைமாத ஆரம்பத்தில் போராளிக் குழுக்கள் மீண்டும் லண்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி ஒரு இடைக்கால அரசை அமைக்கலாம் எனத் தெரிவித்தார். ஆனால் மாநாடு முடிந்தவுடன் எரித்திரிய பிரதிநிதி பத்திரிகையாளரிடம் பேசுகையில் எரித்திரியா மக்கள் விடுதலை முன்னணி எதியோப்

( 6ஆம் பக்கம் பார்க்க )

## விழுதுகள்...

இவனது இறுதி யாத்திரை நடந்தது அதன் மூலம் "உங்களது நோக்கங்கள் நிறைவேறப்போவதில்லை, புலிகள் வேறு மக்கள் வேறு இல்லை" என்ற செய்தியை வடமராட்சி மக்கள் இந்திய இராணுவத்தினருக்கு உணர்த்தினர். இப்படியான நிகழ்வுகளே இந்தியப்படையினருக்கு தமது தாய் நாட்டைப்பற்றி நினைக்க வைத்தன.

# பிரிட்டிஷ் தூதரை வெளியேற சிறிலங்கா பணிப்பு

(கொழும்பு)

பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் டேவிற் கிளாஸ்ரோனை சிறிலங்காவை விட்டு வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

ராஜீய முறைகளை மீறியதால் அவர் விரும்பத்தகாதவர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த மாதத் தொடக்கத்தில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது கிளாஸ்ரோன் நடந்து கொண்ட முறையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

உயர்ஸ்தானிகர், தேர்தல்களின் போது மாத்தறை மாவட்டத்தில் திக்வெல்ல பகுதியிலிருந்த வாக்களிக்கும் நிலையம் ஒன்றுக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது. சிறிலங்காவின் உள் விவகாரங்களில் இது அனாவசியமான குறுக்கீடு என்று வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் திலகரெட்னா செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்தார்.

இதற்கிடையில், லண்டனில் பிரிட்டிஷ் வெளியுறவு அலுவலகம், வெளியேற்றத்துக்குக் காரணம் எதுவும் கிடையாது என்றும் இங்கிலாந்து புதிய பதில்நடவடிக்கையை யோசிக்கும் என்றும் கூறியது உயர்ஸ்தானிகரின் செய்திகளை சிறிலங்கா அதிகாரிகள் தவறுதலாக அர்த்தம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

டேவிட்கிளாஸ்ரோன் விவகாரம் தொடர்பாக பேர்னாட் திலகரத்தினா லண்டன் சென்று பிரிட்டன் வெளியுறவுத்துறை அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியிருந்தார். பிரிட்டன் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் சிறிலங்கா அரசு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

## "பரணி பாடுவோம்" வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் பரணி பாடுவோம் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழா முதலாம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி விழாவில் இதுவரை வெளியான பாடல்களின் தொகுப்பான தமிழீழ எழுச்சிப் பாடல்களடங்கிய நூலும் பரணி பாடுவோம் என்ற புதிய பாடல் ஒலிப்பதிவு நாடாவும் வெளியிடப்படவுள்ளன.

மேற்படி விழா விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

## சுயவேலை வாய்ப்புபயிற்சி

யாழ் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகம் பெண்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. மேற்படி பயிற்சித் திட்டத்திற்குத் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்கள் நாளை சனிக்கிழமை காலை பத்து மணியளவில் மறுமலர்ச்சிக் கழக அலுவலகத்தில் சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

எரித்திரிய

பிய இடைக்கால அரசில் சேரப் போவதில்லை என்றும், எரித்திரியாவில் ஒரு இடைக்கால அரசை நிறுவப் போவதாகவும், ஒரு வருடத்தின் பின்னர் நடைபெறும் கருத்துக் கணிப்பிலேயே எதியோப்பியாவுடன் சேருவது என்பது தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். அதே வேளை அடிஸ்அபாபாவில் எரித்திரியா பிரிவினைக்கு எதிராகவும் அமெரிக்காவிற்கு எதிரான போராட்டங்களும் நடப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று உலகில் புதிய அரசியல் ஒழுங்கொன்றை உருவாக்கமுற்பட்டுள்ள அமெரிக்கா எரித்திரியா பற்றி எடுக்கும் முடிவானது உலகில் சுய நிர்ணய உரிமை கோரிப் போராடும் இனங்கள் தொடர்பாக புதிய அரசியல் ஒழுங்கில் அதன் நிலைப்பாட்டினை கோடிக்காட்டுவதாக இருக்கும்.

– ஜெயா –

முல்லையில்

மேற்கொண்டனர்.

இம்மோதல் சுமார் இரண்டரை மணித்தியாலம் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின் பின்னர் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.

சிறிலங்கா இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்:

★ ஏ. கே. எல். எம். ஜி -01
★ றம் மகஜின் -01
★ ரவைக்கோர்வைகள் -525
★ ரி. 86 ரகத் துப்பாக்கி -02
★ மகசீன் -05
★ ரி. 56 ரகத் துப்பாக்கி -01
★ மகசீன் -04
★ ஐ எம். ரவைகள் -1200
★ ஜே. ஆர். கைக்குண்டுகள் -02
★ தொலைகாட்டி -01

ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்தியப்

ளு னும், பொலிஸ் அதிகாரிகளுடனும்; புலிகள் இயக்கம் அந்த இயக்கத்தின் தற்கொலைப் படைகள், வெடிகுண்டு வகைகள் பற்றி ஆராய்வார்கள்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன் கொழும்பில் செய்தியாளர் மத்தியில் நேற்றுப் பேசும் போது, இந்தப் படுகொலையில் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சிறிலங்கா கருதுவதாகக் கூறினார். ராஜீவ் காந்தி கொலைதொடர்பாக இலங்கையில் விசாரணை மேற்கொள்ள இந்தியப் புலனாய்வுக் குழுவினருக்கு எல்லாவித உதவிகளையும் சிறிலங்கா வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வீரவணக்கம்

ணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் கட்டன் பிரகாஸ் (சங்கர், இலங்கேஸ்வரன், வவுனியா), லெப் நவம் (கோக்குத்தொடுவாய்), வீரவேங்கை மயூரன் (வில்வமடு) ஆகிய மூன்று போராளிகள் வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவில் ஏற்பட்ட எதிர்பாராத வெடிவிபத்தில் வீரவேங்கை உதயன் (தி. தவராசா, ஜெயந்திநகர், கிளிநொச்சி) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

## திருமலையில் ஒருவர்

இதேதினம் திருமலை மாவட்டத்திலுள்ள கல்மடு என்னுமிடத்தில் எதிர்பாராத வெடிவிபத்துச் சம்பவமொன்றில் வீரவேங்கை பல்லவன் (ம. இராசலிங்கம், பெருவெளி, மூதூர்) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

பொய்யான

ஏமாற்றமும் ஏற்படுகிறது."

"நீண்டகாலமாக பிரபாகரனுடன் மிகவும் நெருங்கிப் பழகியதால் அவரது இலட்சியப் பற்றும் ஆன்ம உறுதியும் எப்படியானதென்பதை நான் நன்கறிவேன். விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு அம்சமும் அவரே திட்டமிடுகிறார். போர்முறைத் திட்டம், போர் யுக்திகள், தாக்குதல்கள் எல்லாவற்றையும் நுணுக்கமாக ஆராய்ந்து, செயல்முறைத்திட்டங்களை வகுப்பவரும் அவரே. காலையிலிருந்து நடுநிசிவரை ஓய்வில்லாமல் உழைக்கிறார். ஒரு தேசியத் தலைவன் என்ற பொறுப்புணர்வுடன், மக்களின் விடுதலை என்ற இலட்சியத்திற்காக தன்னைமுழுமையாக அர்ப்பணித்திருக்கும் மாமனிதர் அவர். எமது விடுதலைப் போராட்டமே அவர் மீதுதான் தங்கியிருக்கிறது. எனவேதான் தமிழீழ மக்களின் விடுதலைக்கு எதிரானசக்திகள் பிரபாகரனை அழித்துவிடவேண்டுமென சங்கற்பம் கட்டி நிற்கின்றன. சிங்கள எதிரி ஒருபுறமும், மற்றும் இனத்துரோக சக்திகள் மறுபுறமும், சர்வதேச நாசகார சக்திகள் இன்னொரு புறமுமாக பிரபாகரனை அழிக்க சதியில் ஈடுபட்டுள்ளன. இந்த சூழ்நிலையில் எமது தலைவருக்கு எவ்வித ஆபத்தும் நிகழாமல் அவரை பாதுகாப்பாக வைத்திருப்பது எமது இயக்கத்தினதும், தேசப்பற்றுள்ள ஒவ்வொரு தமிழனதும் தலையான கடமையாக கொள்ளப்படவேண்டும்.

பிரபாகரனைப் பார்க்க வேண்டும், நேரில் சந்திக்க வேண்டும், அவருடன் பேச வேண்டும் என்று எமது மக்கள் மத்தியில் அலாதியான ஆவல் இருக்கிறது. மக்களின் இந்த ஆசையை நாம் புரிந்துகொள்கிறோம் அதேவேளை பிரபாகரனின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். பிரபாகரன் மக்களிலிருந்து முழுமையாக அந்நியப்பட்டு வாழவில்லை. நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் அவர் மக்களைச் சந்தித்து வருகிறார். குறிப்பாக இயக்க ஆதரவாளர்களை, மாவீரர்களின் உறவினர்களை, மற்றும் இயக்கத்திற்காக உழைக்கும் பலரை அடிக்கடி சந்தித்து வருகிறார். பொதுமக்களிடமிருந்து வரும் பல்லாயிரக்கணக்கான கடிதங்களையும் அவர் வாசித்து நடவடிக்கை எடுக்கத்தவறுவது இல்லை. எனவே எமது மக்கள் தலைவரின் நிலைமையை புரிந்துகொண்டு அவர் பற்றி உலாவும் விசமத்தனமான வதந்திகளை நம்பவேண்டாமெனகேட்டுக்கொள்கிறேன்." இப்படி திரு பாலசிங்கம் கூறினார்.

பிரதேச

கட்சி (இடது) வலியுறுத்தியுள்ளது.

இக்கட்சி கொழும்பில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் இனப்பிரச்சினைக்கான குறைந்த பட்ச அரசியல் தீர்வு அமைய முடியுமென தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.




## நான்கு பெண்கள் காயம்; மதகுரு தப்பினார்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியிலிருந்து தாண்டிக்குளம் தடைமுகாமைத் தாண்டி வந்து கொண்டிருந்த பயணிகளை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடந்த இச் சம்பவத்தில் நான்கு பெண் பயணிகள் காயமடைந்துள்ளனர். இச் சம்பவத்தில் நவாலியைச் சேர்ந்தவரும் தென்னிந்திய திருச்சபையின் பங்குத் தந்தையுமான அருட் திரு. தர்மகுலசிங்கம் மயிரிழையில் உயிர் தப்பியதாக எமது நிருபருக்கு தெரிவித்தார்.

ராஜீவ் கொலை விசாரணைக்கு

## இன்ரபோல் உதவியை இந்தியா நாடுகிறது

(கொழும்பு)

ராஜீவ் காந்தியின் மரணம் குறித்து புலன் விசாரணை நடத்த இன்ரப்போலின் உதவியினை இந்திய அரசாங்கம் நாடியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு, இலங்கை ... றும் அமெரிக்காவி... கும் குழுக்களின் சதியே ராஜீவின் மரணத்திற்குக் காரணம் என இந்தியா கருதுவதாக கூறப்படுகிறது.

உதவி ஆங்கில ஆசிரியர்

## நியமனம் தொடர்பாய் எதுவித தகவலுமில்லை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கப் பாடசாலைகளுக்கு உதவி ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பது சம்பந்தமாகத் தமக்கு இதுவரை எதுவித சுற்று நிருபமும் அரசினால் அனுப்பி வைக்கப்படவில்லை எனயாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான விபரங்களை அறியும் பொருட்டு பலர் தினமும் திணைக்களத்திற்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இம்மாத வர்த்தமானி

- சுந்தரலிங்...

இன்றுவரை வ... குதிக்... ததினால் இது சம்பந்... தகவல்களைப் பெறமுடி... துள்ளது. இது சம்பந்தமா... எமது நிருபர் பணிப்பா... டம் வினவியபோது தான்... சம்பந்தமாக சம்பந்தப்... அதிகாரிகளுடன் தொட... கொள்ளவுள்ளதாகவு... இதன் விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்கும்படி கேட்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## மருந்துடன் நின்ற லொறி வெடித்துச் சிதறியது

(கொழும்பு)

மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு மருந்துடன் செலத் தயாராய் நின்ற லொறி தீப்பிடித்து எரிந்தது.

இரண்டு லட்சம் பெறுமதியான மருந்துப் பொருள்களுடன் நின்றிருந்த அந்த லொறி தீபபற்றிக்கொண்டதில் மருந்துப் பொருள்களும் சேர்ந்து வெடித்துச்சிதறியது இதனால் அருகிலிருந்த இரு வீடுகளின் யன்னல் கண்ணாடிகளும் வெடித்துச் சிதறியதுனெறு குற்றப்புலன் விசாரணைப் பிரிவு தெரிவித்தது.

புலிகளுடன்

சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், பருத்தித்துறைக்கு ஊடாக கப்பலில் வரும் பொருள்களை கொண்டு வருவது சிரமமாக இருப்பதாகக் குறிப்பிட்டதுடன் எம். எஸ். எப் குழுவினர் மீதான தாக்குதல் பற்றி விசாரணை நடத்தும் தனிநபர் ஆணைக் குழு தற்சமயம் பாரிஸ் சென்றுள்ளதாகவும், சர்வகட்சி மகாநாடு இன்று கூட்டப்படுமெனவும் கூறினார்.

மாந்தையில்

ணுவத்தினர்மீது சேத்துக்குளம் என்னுமிடத்தில்வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து பல இழப்புக்களுடன் இராணுவத்தினர் மாந்தைக்குப் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள்கிடைக்கவில்லை.